பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 21 சனிக்கிழமை 04.05.2024 கதிர் 178

# சீனாவுடனான ஒப்பந்தங்களை விரைவுபடுத்த அரசு நடவடிக்கை

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையேயான புரிந்துணர்வுலப்பந்தங்களைவிரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடனைமறுசீரமைப்பதற்கும் பொருளாதார சவால்களை எதிர்கொள்வதற்கும்இலங்கையின் தற்போதைய முயற்சிகளுக்கு தொடர்ந்து ஆதரவு வழங்கப்படும் என சீனா மீண்டும் உறுதியளித்துள்ளது.

இலங்கைக்கானசீனதூதுவர் சி சென்ஹொங்கிற்கும் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

இன்றைய முதலில் சுகாதாரத் துறை தொடர்பான ஓர் எச்சரிக்கை. கடும் வெக்கையான காலமான இப்போது மக்கள் மத்தியில் வைரஸ் தொற்று ஒன்று வேகமாகப் பரவி வருகின்றது என்று மருத்துவத்துறையினர் எச்சரித்துள்ளனர்.

இதனால், மக்கள் கூட்டமாக கூடுவதைத் தவிர்க்குமாறும், குழுவாகச்செல்லும்இடங்களில்முகக் கவசம் அணியுமாறும் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவின் பிரதம வைத்திய அதிகாரி ஹேமாவீரகோன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த வைரஸ் சுவாசக் குழாயில் தோன்றுவதால், இருமல், சளி, காய்ச்சல் மற்றும் உடல் வலி ஆகியவை இதன் முக்கிய அறிகுறிகளாகும். இந்த வைரஸ் தொற்று இரண்டு அல்லது மூன்று நாட்களில் தணிந்தாலும், சில நோயாளிகளுக்கு ஒரு மாதம் அல்லது இரண்டு மாதங்களுக்கு இருமல், சளி மற்றும் பிற சுவாச நோய்கள் தொடர்கின்றன.

இந்தவைரஸ்இன்ஃப்ளுயன்ஸா வைரஸின் ஒரு திரிபு. ☞ 2

## மண் சரிவு அபாய எச்சரிக்கை

பதுளை - எல்ல - கரந்தகொல்ல பகுதியில் எந் நேரத்திலும் பெரும் மண்சரிவு ஏற்படக் கூடிய அபாயம் நிலவுவதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, எல்ல - கரந்தகொல்ல பகுதிகளில் ஏற்பட்டுள்ளமண்சரிவுஅபாயம் உமாஓயா பல்நோக்கு திட்டத் தின் விளைவா? இல்லையா? என்பதை கண்டறிவதற்காக தொழில்நுட்ப உபகரணங்களைநிறுவ தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் நடவடிக்கை எடுத் துள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட சிரேஷ்ட புவியியலாளர்கள் குழுவொன்று, எல்ல கரந்தகொல்ல மற்றும் மலித்த கொல்ல பகுதிகளை ஆய்வு செய்ததது.

எல்ல கரந்தகொல்ல மற்றும் மலித்தகொல்ல பகுதிகளில் ஏற்பட்டுள்ள மண்சரிவு அபாயம் குறித்துமுன்னறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, உமாஓயா ☞ 2

## இலங்கையின் பொருளாதாரம் சீரமைப்பால் ஸ்திரமடைந்தது

### அமெ. திறைசேரி அதிகாரி தெரிவிப்பு

மறுசீரமைப்புக்களினால் இலங்கையின்பொருளாதாரம் ஸ்திரமடைந்துள்ளது என்று அமெரிக்க திறைசேரியின் பிரதி உதவிச் செயலாளர் ரொபட் கப்ரோன் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவிடம் குறிப்பிட்டுள்ளார். ☞ 8

## மருத்துவ மாணவர் போராட்டம் மீது பொலிஸார் நேற்று நீர்தாரை தாக்கு

### விரட்டியடிக்கப்பட்டனர் மாணவர்கள்

பணம் செலுத்தி மருத்துவக் கற்கையைத் தொடர்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் பல்கலைக்கழக மாணவர்கள் பலர் நேற்று எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை நீர்த்தாரைத் தாக்குதல்நடத்தி பொலிஸார் விரட்டியடித்தனர்.

கொழும்பு விஹார மகாதேவி பூங்காவிற்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் ஆரம்பமானதோடு ஆர்ப்பாட்டத்தில் 'சுதந்திர சுகாதார பட்டப்படிப்பினை பணத்திற்காக விற்பனை செய்யும் அரசின் ☞ 8

## கொத்து, ப்ரைட ரைஸ் விலைகள் குறைப்பு

### 20 ரூபாயால் மட்டும்

எரிவாயு விலை குறைக்கப்பட்டுள்ள நிலையில் உணவுப் பொருட்கள் சிலவற்றின் விலைகளைக் குறைக்க அகில இலங்கைச் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித் துள்ளது.

இதன்படி கொத்து மற்றும் ப்ரைட் ரைஸ் ஆகிய உணவுகளின் விலை 20 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷான் தெரிவித்தார்.

இதேவேளை, சிற்றுண்டிகளின் விலையும் 10 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. உணவுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ள போதிலும், சாதாரண தேநீர் மற்றும் பால் தேநீர் ஆகியவற்றின் விலைகளில் மாற்றம் செய்யப்படவில்லை எனவும் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

## நாகப்பட்டினம் – காங்கேசன்துறை கப்பல் சேவை மே 13 தொடக்கம்

### அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அறிவிப்பு

இந்தியாவின் நாகப்பட்டினத்திற்கும் இலங்கையின் காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை மீண்டும் மே 13 தொடங்கும் என்று துறைமுகங்கள் கப்பற்துறை விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

வெலிமடையில் ஊலபரணகமவில் மேற்கொள்ளப்பட்டுவரும் பாலத்தின் நிர்மாணப் பணிகளை நேற்றைய தினம் அவர் கண்காணிக்கச் சென்றிருந்தபோது செய்தியாளர்களிடம் பேசினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த மாதம் 13ஆம் திகதி இந்தியாவுக்கும், இலங்கைக்கும்இடையில் மீண்டும் படகுசேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. அது நாகப்பட்டினத்துக்கும், காங்கேசன் துறைக்கும் இடையில் முன்னெடுக்கப்பட ☞ 8

## ராஜபக்சக்களுடன் கூட்டணி வைத்து ரணில் வெறுப்பை சம்பாதிக்கக்கூடாது

### சம்பிக்க ரணவக்க ஆதங்கம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ராஜபக்சக்களுடன் கூட்டணியமைத்து மக்களின் வெறுப்பை சம்பாதிக்கக்கூடாது. ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் பொதுஜனபெரமுனவுக்கு நாட்டு மக்கள் நல்ல பாடம் புகட்டுவார்கள் என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டதன் பின்னர் செய்தியாளர்களிடம்அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

மே தின கூட்டத்தில் எமது பலத்தை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளோம் என்று ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவினரும், ராஜபசக்களும் குறிப்பிடுவதுநகைப்புக்குரியது. 2022ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் மக்கள் போராட்டம் பலம் பெற்றதையும், ராஜபக்சக்கள் பதவிகளை விட்டு தப்பிச் சென்றதையும் மறந்து விட்டார்கள்.

பொருளாதார படுகொலையாளிகள் என்று உயர் நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்ட ராஜக்சக்களை முன்னிலைப் படுத் தியுள்ள ஸ்ரீ லங்கா பொதுஜனபெரமுனவுக்கு அரசியல் எதிர்காலம் என்பதொன்று ☞ 8

## இந்திய உயர் ஆணையர் கிழக்கிற்குத் திடீர் பயணம்

இலங்கைக்கான இந்தியஉயர்ஆணையர் சந்தோஷ் ஜா தலைமையிலான உயர்மட்ட அதிகாரிகள் குழு கிழக்கு மாகாணத்துக்கு விசேட பயணத்தை மேற்கொண்டுள்ளது. இந்தப் பயணத்தின்போது உயர்ஆணையர், திருகோணமலையில் முன்னெடுக்கப்படும் இந்திய திட்டங்கள் மற்றும் எண்ணெய் தாங்கி முனையம், விமானப் படைத்தளம் உள்ளிட்ட முக்கிய இடங்களைச் சென்று பார்வையிட்டுள்ளார்.

கிழக்கில் இந்தியா மேற்கொள்ள இருக்கும் சில அபிவிருத்தித் திட்டங்களுக்கு அண்மையில் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டங்களைநடத்தியநிலையில் உயர் ஆணையரின் இந்தத் திடீர்ப் பயணம் இடம்பெற்றுள்ளது.

இந்தியாவின் மிகப்பெரிய ஒருங்கிணைந்த எரிசக்தி நிறுவனம் மற்றும் இலங்கை ☞ 2

## ஜப்பானிய அயலுறவு அமைச்சர் 2 நாள் பயணமாக இன்று வருகை

ஜப்பான் அயலுறவுத்துறை அமைச்சர் யொகோ கமிகவா இருநாள் உத்தியோகபூர்வப் பயணமாக இன்று சனிக்கிழமை இலங்கைக்குவருகைதரவுள்ளார்.

மே 4, 5 இரு நாட்களும் நாட்டில் தங்கியிருக்கும் அவர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரை மரியாதை நிமித்தம் சந்திக்கவுள்ளார்.

அத்தோடுஜப்பானிய அயலுறவுத்துறை அமைச்சர் யொகோ கமிகவா தலைமையிலானகுழுவினருக்கும் அயலுறவுத்துறை அமைச்சர்அலிசப்ரிக்கும் இடையிலான இருதரப்பு கலந்துரையாடல்களும் இடம்பெறவுள்ளன.

அதனைத் தொடர்ந்து இருவரும் இணைந்து நடத்தும் கூட்டு செய்தியாளர் சந்திப்பு இன்று பிற்பகல் 2.30 மணிக்கு அயலுறவுத்துறை அமைச்சில் நடைபெறவுள்ளது.

மேற்கூறப்பட்ட உயர்மட்ட சந்திப்புக்களின் ☞ 8

### மத்திய கிழக்கு போர்ச் சூழலால்

## கொழும்பு துறைமுகத்தில் செயற்பாடுகள் அதிகரிப்பு

செங்கடலைச் சுற்றியுள்ள மத்தியவளைகுடா வலய போர்ச் சூழல் காரணமாக கொழும்பு துறைமுகத்தின் கொள்கலன் ஏற்றுமதி, இறக்குமதி செயற்பாடுகள் அதிகரித்துள்ளன.

இந்த வருடத்தின் முதல் காலாண்டில் கொள்கலன்கள் கையாளுதல் செயற்பாடுகள் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளதாகவும் கடந்த வருடத்தின் முதல் காலாண்டுடன் ஒப்பிடும்போது அது 48 வீத அதிகரிப்பு என்றும் துறைமுக அதிகார சபை தெரிவித்துள்ளது.

கொழும்பு துறைமுகத்தின் பிரதான கொள்கலன் செயற்பாட்டாளர்களான துறைமுக அதிகார சபை கடந்த வருடத்தின் முதல் காலாண்டில் 4,41,032 கொள்கலன்களை ஏற்றி இறக்கும் செயற்பாடுகளை ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து முடிந்தவரை விலகி இருப்பதும், குழுவாகவும் கூடும் இடங்களில் முகமூடிகளைஅணிந்துகொள்வதும் இந்த நோயைத் தடுக்க உதவும்" என்றும்மருத்துவர்தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் மாத்திரமன்றி நாடு முழுவதும் இந்தக் காய்ச்சல் வேகமாகப் பரவி வருகின்றதாம். வைரஸ் தொற்றாக இது இருந்தாலும்உடனடியாகச்சிகிச்சை பெறப்படவேண்டும் என்றும் சிகிச்சை அளிக்கப்படாவிட்டால், கடுமையானசுவாசப்பிரச்சினைகள் ஏற்படலாம் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனவே கவனமாக இருங்கள். பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

..................

பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து டொலர் கையிருப்பு இல்லாத காரணத்தால் வாகனங்களின் இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டது. அந்தத் தடை இந்த ஆண்டு தொடக்கத்தில் நீக்கப்படும் என்று அமைச்சர்கள் முன்னர் தெரிவித்து வந்தாலும் அது சாத்தியமாகவில்லை. இந்த ஆண்டு இறுதியில் அல்லது அடுத்த ஆண்டு தொடக்கத்தில் இறக்குமதிக்கு மீண்டும் அனுமதி வழங்கப்படும்என்றுஆளும்தரப்புத் தெரிவித்துள்ளது. இதற்கிடையில் டொலர்வருமானத்தைஅதிகரிக்கும் நோக்கத்தோடு, வெளிநாடுகளில் உழைக்கும் இலங்கையர்கள் தமது பணத்தை உரிய அரச வங்கிகள் ஊடாக முறையாக நாட்டுக்குஅனுப்பினால்அத்தகைய வெளிநாட்டுப் பணியாளர் ஒருவர் பற்றிரியில்இயங்கும்வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி ஆளும் தரப்பு அனுமதி வழங்கியிருந்தது.

அந்தஅனுமதியைப்பயன்படுத்தி மோசடி நடந்தி-ருக்கின்றது என்கிற சந்தேகம் இப்போது கிளம்பியுள்ளது. எதிர்க் கட்சியினர் இதனை இப்போது தூக்கிப்பிடிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். நாடாளுமன்ற கண்காணிப்புக் குழுவின் கண்களில் சிக்கிக் கொண்டுள்ள இந்த விவகாரத்தைக் கிண்டிக்கிளறத்தொடங்கியிருக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா.

ஆளும் தரப்பு வழங்கிய சலுகையைப்பயன்படுத்திவெளிநாடு வாழ் இலங்கைத் தொழிலாளர்கள் மட்டுமே வாகனங்களை இறக்குமதி செய்தார்களா அல்லது இந்த வசதியைப் பயன்படுத்தி வழக்கம்போல பெருச்சாளிகள் பலவும் தாமும் வாகனங்களை இறக்குமதி செய்து கொண்டனவா என்பதைத் துருவித் துருவி விசாரிக்கத்தொடங்கியிருக்கிறார்கள்.

இந்த வாகன இறக்குமதி தொடர்பில் வெளிப்படைத்தன்மை இல்லாததாலும், இதில்பலசிக்கல்கள் இருப்பதாகத் தோன்றுவதாலும், நிதியமைச்சு, மத்திய வங்கி, இலங்கை சுங்க மற்றும் அமைச்சு ஆகியவற்றின் முழுமையான அலசல் தொழிலாளர் மற்றும் வெளிநாட்டுவேலைவாய்ப்புகூட்டாக செய்யற்பட்டு வாகன இறக்குமதி தொடர்பான முழு அறிக்கையைத் தரவேண்டும் என்று அரச நிதி தொடர்பான குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா, இரண்டு வாரங்களுக்குள் அறிக்கையை வழங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இரு வாரங்களுக்கு முன்னர் வலியுறுத்தியிருந்தார். ஆனால்அந்தஅறிக்கைஇன்னமும் தயாராகவில்லை.

இந்த வாகன இறக்குமதிக்கான அனுமதிவழங்கும்காலத்தைஇந்த ஆண்டு செப்டெம்பர் 30 வரை நீடிப்பதாக ஆளும் தரப்பு விடுத்த வர்த்தமானி அறிவித்தலைத் தொடர்ந்தேசர்ச்சைவெடித்தது. அந்த வர்த்தமானியைசெயற்படுத்துவதற்கு அனுமதி தர முடியாது என்றும் ஹர்ஷ டி சில்வா காட்டமாகத் தெரிவித்திருந்தார்.

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் சுற்றறிக்கையின்படி, வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்களுக்கு முழு மின்சார வாகன அனுமதிப்பத்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ், 20,000 அமெரிக்க டொலர் அல்லது அதற்கு மேல் இலங்கைக்கு அனுப்பிய தொழிலாளர்களுக்கு சொகுசு கார்களை இறக்க ரூபாய் 12 மில்லியன் வரை வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி வர்த்தமானி அறிவிப்பு மூலம் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்தது.

இச்செயற்பாட்டின் ஆரம்பத்தில் இருந்து வாகனங்கள் கொண்டு வரப்பட்ட நபர்கள் உள்ளிட்ட அனைத்து தகவல்களையும் வழங்குமாறு நிதியமைச்சு தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சிடம் கோரியிருந்த போதிலும் அது வழங்கப்படவில்லை. இந்த வாகன இறக்குமதி தொடர்பில் பல்வேறு முறைகேடுகள் குறித்த குற்றச்சாட்டுகள் இருப்பதாக ஹர்ஷ கூறுகின்றார்.

இந்த வரிச்சலுகை மூலம் ரூ. 100 மில்லியன் பெறுமதியான வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இதுவரை 1019 இறக்குமதி உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் இதன் மூலம் 109.8 மில்லியன் அமெரிக்க டொலர்கள்செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

உண்மைகள்வெளிவரும்போது ஆளும் தரப்பிற்கு இது மற்றொரு தலையிடியாக வரும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சீனாவுடனான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் தினேஷ் குணவர்தன இடையில் நேற்று சந்திப்பொன்று அலரி மாளிகையில் இடம்பெற்றுள்ளது.

பிரதமரின் சீனாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தின் போது, இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களை விரைவாகநடைமுறைப்படுத்துவது குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துவது இலங்கைக்கும்சீனாவுக்கும்இடையிலான நீண்டகால நட்புறவு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பின் புதிய அத்தியாயத்தை ஆரம்பிக்கும் என பிரதமர் இதன்போது தெரிவித்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக, பொருளாதார பிரச்சினைகளுக்கு நீண்டகாலதீர்வாகசீனாவிடமிருந்து நேரடி தனியார் முதலீட்டையும், விவசாயம், மீள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, தகவல் தொழில்நுட்பம், கல்வி மற்றும் நீர் வழங்கல் துறைகளில்புதிய முதலீடுகளையும் இலங்கை எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

கடினமான நிலைமைகளை வெற்றிகொள்வதற்கு இலங்கை மேற்கொண்டு வரும் முயற்சிகள் குறித்து தாம் மகிழ்ச்சியடைவதாக குறிப்பிட்ட தூதுவர், கடனை மறுசீரமைப்பதற்கும் பொருளாதார சவால்களை எதிர்கொள்வதற்கும் இலங்கையின் தற்போதைய முயற்சிகளுக்கும் சீனா தொடர்ந்து ஆதரவளிக்கும் என உறுதியளித்துள்ளார்.

## கொழும்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டுள்ளது. இந்த வருடத்தில் அது 6,52, 766 ஆக அதிகரித்துள்ளளது. இது 48 வீத அதிகரிப்பைக் காட்டுவதாகவும் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அத்துடன் துறைமுக அதிகார சபை இந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் 5,82,483 கொள்கலன்களை மீள் ஏற்றுமதி செய்துள்ளதாகவும், கடந்த வருடத்தின் முதல் மூன்று மாதத்துடன்ஒப்பிடுகையில்இது,49. 81சதவீதமான அதிகரிப்பு என்றும் அந்தஅதிகாரசபைதெரிவித்துள்ளது.

அதேபோன்று முழுமையான கொழும்பு துறைமுகம், இந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் 1, 729 ,314 கொள்கலன்களை மீள் ஏற்றுமதி செய்துள்ளது.

SLPA, CICT, ECT மற்றும் JCT ஆகிய முனையங்களின் மூலமே இந்த செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது கடந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களுடன் ஒப்பிடுகையில் 24.20சதமீத அதிகரிப்பாகும் என்றும் துறைமுக அதிகார சபை தெரிவித்தது.

துறைமுக அதிகார சபையின் தலைவர் கீன் டீ பேர்னாட் இது தொடர்பில் தெரிவிக்கையில்,

தற்போதுசெங்கடலைசுற்றியுள்ள மத்திய வளைகுடா பிராந்தியத்தில் நிலவும் யுத்த நிலைமையால், கொழும்பு துறைமுகத்தின் கொள்கலன் செயற்பாடுகள் குறுகிய காலத்தில் பாரிய அதிகரிப்பை பதிவு செய்துள்ளதாகவும்தெரிவித்துள்ளார்.

மத்திய வளைகுடா வலயத்தில் இயங்கும் சில முக்கிய கப்பல் வலையமைப்புகள் தற்போது யுத்த எச்சரிக்கை வலயங்களாக காணப்படுவதால், செங்கடல் மற்றும் சுயெஸ் கால்வாய் தவிர ஏனைய கப்பல்கள் தமது கொள்கலன் மீள் ஏற்றுமதிக்காக கொழும்பு துறைமுகத்தை தெரிவு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, எந்த ஒரு பூகோள நிலைமைகளையும் எதிர்கொள்ளக் கூடியதாக கொழும்பு துறைமுகம் காணப்படுவதால், நிலைமைகளை முகாமைத்துவம் செய்து சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள முடிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மண் சரிவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்நோக்கு திட்டத்தினால் இந்த மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் சிறப்புக் குழுவினால் அங்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பின்னர், அதன் பணிப்பாளர் நாயகம் ஆசிரி கருணாவர்தனகருத்துரைக்கையில், இம்மண்சரிவு அபாயம் தொடர்பில் கவனம் செலுத்தி வருவதாக தெரிவித்தார்.

இந்தபகுதிகளில்பொருத்தப்படும் தொழில்நுட்ப கருவிகளின் அடிப்படையில்விஞ்ஞானபூர்வமாக இதை,உறுதிப்படுத்த முடியுமென குறிப்பிட்டார்.

# ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்பு






மே 3 சர்வதேச ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணத்தில் நேற்று கவன வீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது. ஊடகவியலாளர்கள் பலர் கலந்துகொண்ட இந்தப் போராட்டத்தில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி குரல் எழுப்பினர்.

யாழ். ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் றக்கா வீதியில் உள்ள அதன் அலுவலகம் முன்பாக மாலை 3 மணியளவில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

ஊடக நிறுவனங்கள் மீது மேற்கொள்ளப்பட தாக்குதல்கள் தொடர்பில் உண்மையான, முழுமையான விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும்எனவும் போராட்டக்காரர்கள்வலியுறுத்தினர்.

அத்துடன், அரச அதிகாரிகள், அரச பலத்தைப் பயன்படுத்தி ஊடகவியலாளர்களைநெருக்கடிக்கு உள்ளாக்கி, அச்சுறுத்தும் செயற்பாடுகளைநிறுத்த வேண்டும் எனவும், ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் போராட்டத்தில் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# டொலர் கையிருப்பு அதிகரிப்பு

நாட்டின் உத்தியோகபூர்வ அமெரிக்க டொலர் கையிருப்பு 5 பில்லியனாக அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2024 மார்ச் வரையான மொத்த உத்தியோகபூர்வ கையிருப்பின் அளவு அதிகரித்ததாக தெரிவித்துள்ள மத்திய வங்கி, உள்நாட்டு மற்றும் அந்நிய செலாவணி சந்தைகளிலிருந்து நிகர அடிப்படையில் அந்நிய செலாவணியை கணிசமான அளவில் கொள்முதல் செய்ததால் மொத்தஉத்தியோகபூர்வகையிருப்பு அதிகரித் ததாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இந்தக் கையிருப்பு அதிகரிப்பில் சீன மத்திய வங்கியின் அந்நிய செலாவணியும் உள்ளடங்குகிறது. வர்த்தகப் பொருட்களின் ஏற்றுமதி வருமானம்மார்ச்சில்1,139மில்லியன் அமெரிக்க டொலர் என்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த வருட மார்ச்சுடன் ஒப்பிடுகையில் இது 9.8 சதவீத அதிகரிப்பாகஉள்ளது. தொழில்துறை பொருட்களின் ஏற்றுமதியே வருமான அதிகரிப்பில் பங்களிப்புச் செலுத்தியுள்ளது. அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி ஏப்ரல் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 9.1 சதவீதத்தால்அதிகரித்த அதேசமயம், யூரோ, ஸ்டேர்லிங் பவுண்ட், ஜப்பானிய யென், இந்திய ரூபா மற்றும் அவுஸ்திரேலிய டொலர் ஆகியவற்றுக்கு நிகரான ரூபாவின் பெறுமதியும் அதிகரித்துள்ளதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

### ஓ.எல். பரீட்சார்த்திகளுக்காக

# அ.அட்டை அலுவலகம் இன்றும் திறந்திருக்கும்

கல்வி பொது தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்வதற்காகஆட்பதிவுதிணைக்கள அலுவலகங்கள் இன்று திறக்கப்படும் என்று ஆட்பதிவு ஆணையாளர் நாயகம் பிரதீப் சபுதந்தி தெரிவித்தார்.

இம்முறை கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ளவிண்ணப்பதாரர்களில் சிலர் இதுவரை தமது தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்ளவில்லை என அவர் குறிப்பிட்டார்.

சில பரீட்சார்த்திகள் தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்வதற்கானவிண்ணப்பங்களை இதுவரை சமர்ப்பிக்கவில்லை எனவும் ஆட்பதிவு ஆணையாளர்நாயகம்தெரிவித்தார்.

இதற்கிணங்க, கொழும்பு, காலி, குருநாகல், நுவரெலியா, வவுனியா, மட்டக்களப்பு ஆகிய மாவட்ட அலுவலகங்களை இன்று திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆட்பதிவு ஆணையாளர் நாயகம் பிரதீப் சபுதந்தி குறிப்பிட்டார்.

இதனிடையே, பரீட்சைக்கு தோற்றவுள்ள பாடசாலை மற்றும் தனியார்விண்ணப்பதாரர்களுக்கான பரீட்சை அனுமதிப்பத்திரம் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சைதிணைக்களம்தெரிவித்தது. கல்வி பொது தராதர சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் 06 ஆம் திகதி ஆரம்பமாகி 15 ஆம் திகதி நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மின்சாரசபை ஆகியவற்றுக்கு இடையே ஒரு கூட்டு முயற்சியாக உருவாக்கப்படும் சம்பூரில் அமைந்துள்ள சூரிய சக்தி ஆலையையும்உயர்ஆணையர்சந்தோஷ் ஜா பார்வையிட்டார்.

கடந்த ஆண்டு ஜூலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதுடில்லிக்குச் சென்றிருந்தபோது, இந்தத் திட்டத்திற்கான அனுமதி வழங்கப்பட்டது.

உயர்ஆணையர் திருகோணமலை எண்ணெய் தாங்கிகளையும் பார்வையிட்டார். அங்கு லங்கா ஐ.ஓ.பி.எல்.சியின் முதலீடுகள் மூலம் ஈர்க்கக்கூடிய அபிவிருத்தி குறித்து அவருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

லூப்ரிகண்ட் கலப்பு ஆலை மூலம் இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள இலங்கையின் முதல்கிரீஸ்உற்பத்திஆலையையும் உயர்ஆணையர் பார்வையிட்டார். இலங்கையின் எரிசக்தி பாதுகாப்பு மற்றும்இந்தியா-இலங்கைஎரிசக்தி கூட்டாண்மைக்கு பங்களிக்கும், எண்ணெய் தாங்கி அபிவிருத்தி திட்டங்களின் வளர்ச்சியின் சாத்தியக்கூறுகள்குறித்துஅவருக்கு விளக்கப்பட்டது.

மூதூர் ஆதார வைத்திய சாலைக்கு லங்கா ஐ.ஓ.சி.பி.எல்.சி. மருத்துவஉபகரணத்தைவழங்கும் நிகழ்விலும் கலந்து கொண்ட

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# தீர்வை தருவாரா? தமிழ் மக்களை தீர்த்துக் கட்டுவாரா அனுரகுமார?

## சந்தேகம் என்கிறார் ஈ.பி.டி.யின் சிறீரங்கேஸ்வரன்




இணைந்திருந்த வடக்கு - கிழக்கு மாகாணத்தை உச்ச நீதிமன்றம் சென்று பிரித்த ஜே.வி.பி தமிழ் மக்களின் அதிகாரத்துக்கான நியாயமான உரிமைகளை எவ்வாறு தரும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் ஊடக சந்திப்பை மேற்கொண்ட அவர் இவ்வாறு தெரிவித்திருந்ததுடன் அவ்விடயம் தொடர்பில் மேலும் கூறுகையில் -

பிரபல ஆங்கில ஊடகமான சண்டே ரைம்ஸ் ஊடகத்திற்கு ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க நாட்டில் பல ஆண்டுகளாக ஆட்சியாளர்களால் தொடர்ந்து மறுக்கப்பட்டுவந்த தமிழ் மக்களின் அதிகாரத்துக்கான நியாயமான உரிமைகளை உறுதி செய்வதோடு இலங்கையில் இனப் பிரச்சினைக்குநிரந்தரதீர்வைப்பெற்றுக்கொடுத்து தேசத்தை மீண்டும் கட்டியெழுப்ப தன்னால் முடியும் எனக் கூறியுள்ளார்.

அதேநேரம் 2019 ஆம் ஆண்டு தங்களது கொள்கை குறித்த ஆவணத்திலும் 13 ஆவது திருத்தம் மற்றும் மாகாணசபைகள் குறித்து தமது நிலைப்பாட்டை வெளியிட்டிருப்பதாகவும் சூசகமாகக் கூறியுள்ளார்.

இந்திய இலங்கை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்தைத் தமிழர்களின் ஒரு நிலத் தொடருள்ள தாயக பூமியாக தமிழ் மக்கள் வாழ்வதைக் கூட விரும்பாத ஜே.வி.பி அதற்கு எதிராக உச்சநீதிமன்றத்தை நாடி வடக்கு கிழக்கை தனித்தனி மாகாணங்களாக பிரித்தது வரலாறு.

குறைந்தபட்சமாக வடக்கு கிழக்கு மாகாணத்தை தமிழர்கள் ஒன்றிணைந்து வாழ்வதைக் கூட விரும்பாத இனவாத சிந்தனையுடன் செயற்பட்ட ஜே.வி.பி தலைவர் இப்போது ஜனாதிபதி தேர்தல் நடைபெறக் கூடும் என்ற சூழலில் தமிழ் மக்களுக்கான நியாயமான உரிமைகளை உறுதி செய்வதாக அந்த ஊடகத்திற்கு கூறியுள்ளார்.

இதிலிருந்து பட்டவர்த்தனமாக புலப்படுவது தேர்தலை இலக்குவைத்து சமீபத்தில் புலம்பெயர் தேசம் சென்றிருந்த ஜே.வி.பி தலைவர் அங்குள்ள அமைப்புகளின் கருத்துக்களை அறிந்து தமிழ் மக்களின் வாக்கை அபகரிக்கின்ற யுக்தியாக இவ்வாறான ஒரு கருத்தை சொல்ல முனைந்துள்ளார்.

உண்மையில் தமிழ் மக்களின் அரசியல் உரிமை மற்றும் தீர்வுகளை முன்னெடுக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் ஜே.வி.பி எவ்வாறான முட்டுக்கட்டைகளை அரசாங்கங்களுக்கு போட்டிருந்தது என்பதை தமிழ் மக்கள் கண்ணூடாக பார்த்துள்ளனர்.

கடந்த ஏப்ரல் 04 ஆம் திகதி யாழ்ப்பாணம் வலப்புரி விருந்தினர் விடுதியில் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைத்த ஜே.வி.பி தலைவர் நான் சமஸ்டியைத் தருவேன் என்றோ, 13 ஆவது திருத்தத்தை தருவேன் என்றோ இங்கு பேரம் பேச வரவில்லை என இனவாத மமதை கலந்த போக்குடன் கூறியிருந்தார்.

எனவேகுறைந்தபட்சமாகஉள்ளமாகாணமுறைமையைக் கூட ஏற்றுக்கொள்ளாத ஜே.வி.பி தமிழ் மக்களுக்கு எவ்வாறு நியாயமான உரிமைகளை வழங்கும் என்றும் அவர் எழுப்பியிருந்த ரங்கேஸ்வரன் -

இனவாதக் கொள்கையை வகுத்து நீண்டகாலமாக தமது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் ஜே.வி.பியினர், அண்மைய காலத்தில் தமிழ் மக்கள் மீது கரிசனை கொள்வது போன்று ஊடக செய்திகளை வேளியிட்டு வருவதைப் பார்த்தால் தமிழ் மக்களுக்கான தீர்வை அல்ல தமிழ் மக்களின் இருப்பையே இல்லாது செய்யும் வகையில் அமைந்துவிடும் என்ற சந்தேகம் எழுவதாகவும் சந்தேகம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

## தம்பிலுவில் தேசிய பாடசாலை மாணவி திலீபன் வைபவி தேசிய மட்டக் கணித ஒலிம்பியாட் போட்டிக்குத் தெரிவு!



(திருக்கோவில் நிருபர்-எஸ்.கார்த்திகேசு)

அம்பாறை திருக்கோவில் கல்வி வலயத்திற்குட்பட்ட தம்பிலுவில் தேசிய பாடசாலையில் தரம் 06 இல் கல்வி பயிலும் செல்வி திலீபன் வைபவி எனும் மாணவி தேசிய மட்ட கணித ஒலிம்பியாட் குழுமத்தில் இருந்து தேசிய மட்ட கணித ஒலிம்பியாட் போட்டிக்கு தெரிவாகியதையிட்டு பாராட்டி கௌரவித்துள்ளனர்.

இம் மாணவியை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் கே.கங்காதரன் தலைமையில் பாடசாலை ஒன்றுகூடல் வளாகத்தில் நேற்று (வெள்ளிக்ஹீழமைகாலை இடம்பெற்று இருந்தது.

தேசிய மட்டத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற போட்டியில் பங்கு கொண்டு வெற்றிப் பெற்ற மாணவி செல்வி திலீபன் வைபவிக்கு பொறுப்பாசிரியை அவர்கள் மாலை அணிவிக்க திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர்.உதயகுமாரால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்து இருந்தார்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர்.உதயகுமார் கலந்து கொண்டு இருந்ததுடன் வலயக் கல்வி அலுவலக அதிகாரிகள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டு



மாணவியைப் பாராட்டிக் கௌரவித்து இருந்தனர்.(05)

## ஏப்ரலில் பணவீக்கம் 1.5 வீதமாக உயர்வு

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மதிப்பீட்டின் பிரகாரம் கடந்த மார்ச் மாதம் 0.9 சதவீதமாகப் பதிவாகியிருந்த பணவீக்கம், ஏப்ரல் மாதம் 1.5 சதவீதமாக சிறு அளவால் அதிகரித்துள்ளது.

அதன்படிகடந்த மார்ச் மாதத்தில் 3.8 சதவீதமாகப் பதிவான உணவுப் பணவீக்கம் ஏப்ரலில் 2.9 சதவீத மாகவீழ்ச்சியடைந்ததுடன், மார்ச்சில் 0.5 சதவீதம் எனும் குறிப்பிடத் தக்களவிலான சுருக்கத் தைப் பதிவுசெய்த உணவல்லாப் பணவீக்கம் ஏப்ரலில் 0.9 சதவீதமாக அதிகரித்தது.

மேலும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெணின் மாதாந்த மாற்றம் ஏப்ரலில் -0.79 சதவீத மாகப் பதிவாகியுள்ளது. இதற்கு உணவுப்பொருள்களின் விலைக ளில் அவதானிக்கப்பட்ட 0.32 சதவீத வீழ்ச்சியும், உணவல்லாப் பொருள்கள் மற்றும் சேவைகளின் விலைகள், கட்டணங்களில் அவதா னிக்கப்பட்ட 0.47 சதவீத வீழ்ச்சியும் காரணமாக அமைந்துள்ளன.

அதேவேளைபொருளாதாரத்தின் அடிப்படைப் பணவீக்கத்தைப் பிரதிபலிக்கின்றமையப்பணவீக்கம் கடந்த மார்ச் மாதத்தில் பதிவான 3.1 சதவீதத்திலிருந்து ஏப்ரலில் 3.4 சதவீதமாக அதிகரித்துள்ளது.

இது இவ்வாறிருக்க பொருத் தமான கொள்கை வழிமுறைகள் மற்றும் உறுதியான பணவீக்க எதிர்பார்க்கைகள் என்பவற்றின் மூலம் துணையளிக்கப்பட்டு, பணவீக்கமானது எதிர்வரும் காலத்தில் இலக்கிடப்பட்ட மட்டத்தை அடையுமென மத்திய வங்கி எதிர்வுகூறியுள்ளது.(05)

## கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சை மிளகாய் விலை வீழ்ச்சி

### செய்கையாளர்கள் பாதிப்பு

அரசாங்கத்தின் நவீன விவசாய விரிவாக்கல் திட்டத்தின் கீழ் கண்டாவளை பிரதேசத்தில் 300 இற்கு மேற்பட்டோர் மிளகாய் செய்கையில் ஈடுபடுகின்ற நிலையில் தற்பொழுது பச்சை மிளகாய் 60 தொடக்கம் 70 ரூபாவுக்கே கொள்வனவு செய்கின்ற நிலையில் தமது உற்பத்தி செலவையே ஈடுசெய்ய முடியாத நிலையுள்ளதாக விவசாயிகள் தெரிக்கின்றனர். உரிய அதிகாரிகள் தமது உற்பத்திக்குநியாயவிலையை வழங்குமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

அத்துடன்மேலும்தெரிவிக் கையில் -

தற்பொழுது பச்சை மிளகாயை அறுவடை செய்வதற்காககிலோஒன்றுக்கு நாம் 30 ரூபா தொடக்கம் 40 ரூபா செலவு செய்வதாகவும் விற்பனை செய்யும் பொழுது 70ரூபாவுக்கு இடைத்தரகர்கள் மூலம் கொள்வனவு செய்யப்படுவதாகவும் இத்த பச்சை மிளகாயை உலரவிடுவதற்கான இயந்திர வசதிகள் இல்லாத காரணத்தால் அடிமாட்டு விலைக்க விற்பனை செய்யும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக நாளாந்தம் ஏற்படுகின்ற செலவைக் கூட பெற முடியாத நிலையில் மிளகாய் செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்எனவும் மிளகாய்செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர். (05 - 113)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## பத்திரிகைச் சுதந்திரம்

**வைகாசி 3 ஆன நேற்று உலக பத்திரிகைச் சுதந்திர நாள். உலகம் பத்திரிகையாளர்களுக்கு மேலும் மேலும் ஆபத்தானதாக மாறிவரும் நிலையில், இந்த நாள் முக்கியத்துவம் மிக்கதாக இருந்தது. இருந்தாலும் இலங்கையில் அரசியல் உழைப்பாளர் தினத்திற்குப் பின்னான இந்த நாள் அதிகம் கவனிக்கப்படாமலேயே கடந்து சென்றது. ஜனநாயகமும் ஊடக சுதந்திரமும் இங்கு தழைத்தோங்–குவதாக ஆளும் தரப்பினரும் அரச தலைவரும் தம்பட்டம் அடித்துக்கொண்டாலும் உண்மை அதற்குப் புறம்பானதாகவே இருக்கின்றது.**

**ஏற்கனவே ஊடகவியலாளர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட எந்தவொரு வன்முறைகளுக்கும் நீதி வழங்கப்படவில்லை. தாம் ஆட்சிக்கு வந்தால் ஊடகவியலாளர்களின் படுகொலைகளை விசாரித்து நீதியை நிலைநாட்டுவோம், ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு நீதியைப் பெற்றுத் தருவோம், காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு என்ன நடந்ததுஎன்கிறஉண்மையைக்கண்டறிவோம், பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு இழப்பீடு வழங்குவோம் என்றெல்லாம் கடந்த காலங்களில் வாக்குறுதியளித்து அதற்காகவே தமக்கு வாக்களியுங்கள் என்று கேட்டவர்கள்தான் இன்று ஆட்சியில் இருக்கின்றார்கள் என்கிறபோதும் அவற்றில் ஒரு வாக்குறுதிகூட நிறைவேற்றப்படவில்லை என்பது துன்பியல்.**

**இலங்கையில் பத்திரிகையாளர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளார்கள், ஊடகப் பணியாளர்கள் பலரும் கொல்லப்பட்டுள்ளார், கேலிச் சித்திரக் கலைஞர் பிரகீத் எக்னெலிகொட உட்பட ஊடகவியலாளர்கள் பலரும் காணாமலாக்கப்பட்டுள்ளார்கள், தமது கட்டுரைகளுக்காகவும் ஆக்கங்களுக்காகவும் சிறைகளில்அடைக்கப்பட்டுள்ளார்கள். இன்றும்சட்டங்கள் மூலமும் அரச படைகள் மூலமும் பத்திரிகையாளர்கள் அச்சுறுத்தப்படுகிறார்கள், அவர்களின் கடமைகளைச் செய்யவிடாமல் தடுக்கப்படுகின்றார்கள். ஆளும் தரப்பிற்கு ஆதரவாக எழுதவில்லை என்றால் அஞ்சி நடுங்கியே வாழ வேண்டும் என்கிற நிலையே நாட்டில் தொடர்கின்றது.**

**இந்த ஆண்டு சர்வதேச ஊடக செயல்பாடுகளைக் கண்காணிக்கும் அமைப்பான ரிபோர்ட்டர்ஸ் வித்தவுட் பார்டர்ஸ் (Reporters Without Borders (RSF) பத்திரிகைச் சுதந்திரத்திற்கான குறிகாட்டிப் பட்டியலில் இலங்கைக்கு கிடைத்துள்ள இடம் 150. ஆண்டுதோறும் உலக நாடுகளின் ஊடக சுதந்திரம் பற்றிய தரவரிசையை வெளியிடுவது வழக்கம். அதில் கடந்த ஆண்டு 135ஆவது இடத்தில் இருந்த இலங்கை 15 இடங்கள் கீழிறங்கியுள்ளது. அந்தளவிற்கு இங்கு பத்திரிகைச் சுதந்திரம் மோசமாகியுள்ளது. இத்தனைக்கும் இந்தப் பட்டியலில் 180 நாடுகள்தான் உள்ளன. நல்லாட்சிக் காலத்தில் ஏறுமுகம் கண்ட இந்த குறிகாட்டி எண், பின்னர் ராஜபக்சக்களின் ஆட்சியிலும் இப்போது ரணிலின் ஆட்சியிலும் இறங்குமுகம் காண்கிறது. ஆனால், ஒரு காலத்தில் ஊடகங்களின் காவலராகவும் ஊடக சுதந்திரத்திற்காகப் போராடுபவராகவும்தான் ரணில் அடையாளப்படுத்தப்பட்டிருந்தார் என்பதை மறந்துவிட முடியாது.**

**ஊடகவியலாளர்களைக் கொன்றவர்களும், அவர்களுக்கு எதிராக வன்முறைகளைப் புரிந்தவர்களும் சமூகத்தில் சுதந்திரமாக உலாவித் திரியும் நிலையில் பத்திரிகைச் சுதந்திரம் எப்படி இலங்கையில் முன்னேற்றமடையும்? ஆளும் தரப்பை ஆதரிக்கும் ஊடகவியலாளர்கள் சலுகைகளையும் எதிர்ப்பவர்கள் அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ளும் நிலையில் பத்திரிகைச் சுதந்திரம் மேலும் மேலும் மோசமடைவதைத் தடுக்க முடியாது.**

# தாமதம் வேண்டாம்

**கிசே**

கண்ணுக்குப் புலனாகாத காலத்தை முன்னிறுத்திக் கடமையாற்றும் பணிகளில் தீவிரம் கொண்ட மனிதகுலம் கண்டுபிடித்த கருவிகளுள் மகத்தானவொன்று கடிகாரம். அதுபோல், நாளையும் மாதத்தையும் நிரல்படுத்திக் காட்டிச் செயலாற்றத் தூண்டும் வகையில் உருவாக்கப்பட்டவை நாட்காட்டிகள்.

நகர்ந்து விரைந்த நாட்களின் மீது செயல்களை எழுதிய சிறுகுறிப்புகளைத் தாங்குதற்கென்றே தயாரிக்கப்படுபவை நாட்காட்டிகள் (டைரி).

எல்லாமும் காலத்தைக் கணித்துத் திட்டமிடவும் செயல்படவும் உதவுகிற கருவிகள். அதிலும் குறிப்பாக, கடிகாரமானது காலக்கணிப்பானே ஒழிய, காலத்தைக் கட்டுப்படுத்துகிற கருவி ஆகாது என்பதைப் பல சமயங்களில் மறந்துவிடுகிறோம்.

அலாரம் வைத்து முன் எழுப்பவும், அடுத்தடுத்த பணிகளைத் திட்டமிட்டு முடிக்கவும் உதவுகிற இக்கருவியையும் உள்ளடக்கி வந்திருக்கும் கைப்பேசி, காலத்தை விழுங்கும் கருவியாகவும் ஆகிவிட்டிருக்கிறது.

விதவிதமான வண்ணங்களில், வடிவங்களில் காட்சிகளை முன்விரித்து, நம் எண்ணத்தையும் இயக்கத்தையும் முடக்கிப் போடும் இந்தக் கருவி, சுய சிந்தனை விரிப்பிற்கும் செயலூக்கத் திறனுக்கும் முட்டுக்கட்டையாகி விடுகின்றது. காலப்போக்கில், அந்தக் கருவிக்குத் தீனி போடுகிற, அதற்கே தீனியாகிவிடுகிற தன்மையை நமதாக்கிவிடுகிறது.

யாராலும் தடுத்து நிறுத்த முடியாதவண்ணம் தன்போக்கில் சீராகப் போய்க் கொண்டிருக்கும் பொழுதுகளை முன்னிறுத்திப் பொழுதுபோக்குச் சாதனங்கள் ஆக்கப்பட்டதன் நோக்கம், வீணே பொழுதுகளைப் போக்குதற்கு அல்ல.

காலத்திற்குரிய கடமைகளைப் புரிந்து களைத்துப்போகும்போது, ஓய்வு நேரத்து உற்சாகத்திற்காக உருவாக்கப்பட்டவை அவை. கலை, இலக்கிய வடிவங்களில் தகவமைத்துக் கொள்ளும் நிகழ்வுகளை, எளிதாகநுகர உருவாக்கப்பட்டவைதான் காட்சி, கேள்வி ஊடகங்கள்.

அவற்றின்வழியே மனித மாண்புகளையும் புனித உணர்வுகளையும் புத்துயிர்ப்பாக்கிக் கொள்ள வேண்டும் என்பதே நோக்கம். 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்கிற நிலையில், கண்ட கண்டவற்றையெல்லாம் காட்டிச் செல்லும் அண்மைக்காலக் கருவிகளால் நம் காலம் போகிறது; காலத்தோடு நம் ஆயுளும் கரைகிறது. இந்த உண்மை தெரிந்தும் புத்தியில் உறைக்காமல் போய்க்கொண்டிருக்கிறபோது, இழுத்துத் தடுத்து நிறுத்த இலக்கியம் அல்லாமல் வேறு இல்லை என்பதை உரத்துச் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது.

'நாள்என ஒன்றுபோல் காட்டி உயிர் ஈரும் வாள்' என்று திருக்கு சொல்கிறது. நாளும் விடிகிற பொழுதில் கிழிக்கப்படுகிற நாட்காட்டி (தினசரி காலண்டர்)த் தாளை, அது வாளாக்கிக் காட்டுகிறது. கிழிக்கப்பட்டது தாள் அல்ல, நம் வாழ்வில் ஒரு நாள் என்று உணர்த்திக் காட்டுகிறது.

'காலத்தோடு போக வரவில்லை. காலத்தைப் போக்கவும் வரவில்லை. காலகாலத்திற்கு நிலைத்து நிற்கும் காரியம் ஆற்றப் பிறந்தவர்கள் நாம்' என்ற கடப்பாட்டை அறிவுறுத்தும் வரலாற்று நாயகர்களின் வாழ்வியல் நூல்கள் நம்மைக் காலத்தோடு இயங்கவைப்பவை.

பல நூல்களையும் படித்து உள்வாங்கிக் கொள்ளும் அவகாசம் இல்லாத நிலையில்தான், பலரது உரைகளைச் செவிமடுக்கிறோம். அவர்களது சொற்களின் சாரம், செயல்களில் தீரமாக வெளிப்பட்டாக வேண்டும். அவர்களால்தான் பல செயல்வீரர்கள் உலக அளவில் தோன்றி மனித குலத்தை முன்னேற்றியிருக்கின்றார்கள். இன்றைக்கோ, சிந்திப்பதற்குரிய செய்திகளை விடுத்துச் சிரிப்பதற்கான தகவல்களைப் பொறுக்கி எடுத்து, அடுக்கி உரைக்கிற கவர்ச்சிக்கு இலக்காகிக் காலத்தை இழக்கிறோம்.

அதனால், எதையும் பிறகு பார்க்கலாம் என்று தள்ளிப்போடுகிற பழக்கம், வழக்கமாகி, நம் வாழ்வையும் பின்னுக்குத் தள்ளிவிடுகின்றது. நாம் பின் தங்கிப் போய்விடுகிறோம். காலம் முன்னேகிவிடுகிறது. கடைசியில் காலத்தால் ஆற்ற வேண்டிய கடமைகள் தேங்கிவிடுகின்றன. நாம் கடமைகள் செய்யத் தவறிய குற்றவாளிகள் ஆகிவிடுகின்றோம்.

எத்தனை முயன்றாலும் ஈடுகட்ட முடியாத இழப்பு கால இழப்பு என்பதை இன்னமும் நாம் உள்வாங்கவில்லை என்பதே உண்மை. 'காலம் பொன் போன்றது' என்றும் 'கடமை கண் போன்றது' என்றும், எதுகை மோனை கருதி சொல்லி வருகிற நாம், 'காலம் உயிர் போன்றது' என்பதையும், 'அது இயக்கும் உடல் போன்றது கடமை' என்பதையும் உணர்வதற்குள் காலம் நம்மைக் கடந்துவிடுகிறது. நிகழும் காலத்தை, எதற்கும் பயன்படுத்தாமல் கொன்றுவிட்டு இறந்தகாலம் என்கிறோம். இணைந்து இயங்காமல் ஏக்கங்களையும் அபிலாஷைகளையும் நிறைத்துவைத்துக் கொண்டு எதிர்காலம் வருமென்று காத்திருக்கிறோம்.

'உழுகிற நாளில் ஊருக்குப் போனால், அறுக்கிற நாளில் ஆள் தேவையில்லை' என்கிற பழமொழி, 'பசிக்கிறபோது உணவிருக்காது' என்பதை மறைமுகமாய்ச் சுட்டிக்காட்டி, கடமையாற்றத் தவறிய காலத்தை முன்வைத்துச் சோம்பேறித்தனத்திற்குச் சூடு வைக்கிறது.

இன்றைக்கு ஃபுட் பாய்ஸன்' என்ற சொல்லைப் பல நிலைகளில் பயன்படுத்தி வருகிறோம். அதாவது உணவேநஞ்சாகிஉயிருக்குஉலைவைத்துவிடுகிறது. உயிர் காக்கும் உணவாக்கத்தான் உலை வைக்கவேண்டுமே ஒழிய, உணவே உயிருக்கு உலை வைப்பதாகப் போவதன் காரணம் என்ன?

உணவுப் பண்டங்களை உரிய பொழுதுக்குள் பயன்படுத்தாவிடில் கெட்டுப்போய்விடுவதல்லாது, தான் சார்ந்த பண்டங்களையும் கெடுத்துவிடும் என்பது நடைமுறை உண்மை. அமுதாகிய உணவு நஞ்சாகும் ஆபத்து அப்போது நிகழ்கிறது.

'அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு' என்கிற பழமொழிக்குள் அளவாகி நிற்பது, அமுதாகிய உணவின் அளவுமட்டுமல்ல, அதனைப்பயன்படுத்திக் கொள்ள வேண்டிய கால அளவும் கூட. என்னதான் உயிர்காக்கும்மருந்தாயினும், காலாவதியாகிவிட்டால், அது பயன்படாது அல்லவா? பயன்படுத்தினால் பக்க விளைவுகள் நேரும் அல்லவா?

அதுபோல்தான் உரிய காலத்திற்குள் செய்து முடிக்காத பல செயல்கள் அரிய செயல்களை ஆற்றவிடாதுதடுத்துநிறுத்திவிடுகின்றன. அவசரமாகச் செய்யவைத்துத் தவறுகளின் மலினமாகத் தரமிகு வாழ்வைக் குலைத்து விடுகின்றன.

வாழ்வியல் காலத்தில் ஐந்து மணித்துளிகள் அப்படியொன்றும் பெரிய அளவுடையவை இல்லை தான். ஆனால், அதற்குள் மருந்து தந்து காக்கத் தவறியநோயாளிக்குஅதுஉயிர்ப்பிரச்னைஅல்லவா?

ஐந்து மணித்துளிகளில் தவறவிட்ட ரயிலையும் விமானத்தையும் பிடிக்க முடியாவிட்டாலும், அடுத்துவரும் வாகனங்களைக் கொண்டு அந்தப் பயணத்தை மேற்கொண்டுவிடலாம். ஆனால், தவறவிட்ட பொழுது திரும்ப வருமா?

தவறிய பொழுது தேங்கி நிற்கத் தொடர்கிற பொழுதும் தயங்கி நிற்க, வருகிற பொழுதெல்லாம் இவ்வாறு முடங்கிக் கிடக்கும்போது, இயக்கம் எப்படிச் சாத்தியமாகும்? காலத்தைக் கொல்லும் இந்தத் தாமதம் என்னும் நோய், மறதி என்கிற நோயையும், சோம்பல் என்கிற நோயையும், தூக்கம் என்கிற நோயையும் கூடவே, அழைத்துக் கொண்டுவந்து, காலப் போக்கில் மனிதனைக் கொல்லும் தற்கொல்லி நோயாகப் பரிணமித்து விடுகிறது. அதனால்தான்,

**நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்**
**கெடுநீரார் காமக் கலன் (605)**

என்றார் திருவள்ளுவர். நெடுநீர் என்பது விரைந்து செய்யக் கூடியதை நீட்டித்துச் செய்யும் இயல்பு- தாமதம்; மறவி- மறதி; மடி- சோம்பல்; கெடுநீர்-இறப்பு நெருங்கிய தன்மை; காமக் கலன்-விரும்பியேறும் கப்பல்.

'நெடுநீர் முதலிய நான்கும் ஊக்கமில்லார்க்கு இன்பம் தருவன போல் காட்டிப் பின்பு மீளாத் துன்பமாகிய அழிவைத் தருவதால், அவை வாழ்நா எல்லை யடுத்தவர்க்கு இன்ப நீர்ச்செலவு நிகழ்த்துவதுபோல் காட்டி, அவர் விரும்பி ஏறிய பின் அவரைநடுக்கடலில்வீழ்த்திவிடும்மரக்கலங்களுக்கு ஒப்பாகும் என்றார்' என்று இக்குறளுக்கு தேவநேயப் பாவாணர் உரை தருகிறார்.

வரையறுக்கப்பட்ட காலக்கெடுவில் வாய்த்த மனிதப் பிறவியை, புனிதப் பிறவியாக ஆக்க வேண்டும் என்பதற்காகவே அறைகூவல் விடுத்த அருளாளர்கள் பலர் நம்மில் உண்டு. தாமதம் போக்குதற்கான கொள்கைகளை அவரவர்தம் வழிபாட்டுமுறைக்கேற்றவாறு வழங்கத் தோன்றியவை மத ஒழுக்கங்கள்.

அவற்றையெல்லாம் மறந்து உறங்கி காலத்தை வீணடித்தவர்களை, 'நல்ல பொழுதையெல்லாம் தூங்கிக் கெடுத்தவர்கள்/ நாட்டைக் கெடுத்ததுடன் தானும் கெட்டார்...' என்று இடித்துரைத்து எழுப்புகிறார், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

'பாடசாலையில் தூங்கியவன் கல்வியையும், போர்ப்படைதனில் தூங்கியவன் வெற்றியையும், கடைதனில் தூங்கியவன் முதலையும், கொண்ட கடமையில் தூங்கியவன் புகழையும் இழந்தான்' என்று பட்டியல் போடுகிறார். 'இன்னும் பொறுப்புள்ள மனிதரின் தூக்கத்தினால் / பல பொன்னான வேலையெல்லாம் தூங்குதப்பா' என்று அவர் விழிப்புணர்வு வரப் பாடியதையும் தாலாட்டுப் பாடலாக்கிவிடுகிறது தாமதம்.

உழைப்பின் களைப்பினால் துயில்வதும், தேவையற்ற கவலைகளையும் துயர நினைவுகளையும் அவ்வப்போது நினைவுக்கு வராமல் மறந்துவிடுவதும் உயிருக்கு ஆக்கம் தரக் கூடியவையே. ஆனால், அளவுக்கு மீறிய தூக்கமும் அத்தியாவசியமானவற்றை மறக்கும் மறதியும் கேடுவிளைவிப்பவை.

தாமாக வரும் தூக்கத்தையும் மறதியையும், தன்னுடன் பிறப்பித்துக் கொண்டுவரும் தாமதம் என்பது சுகம்போல் காட்டிச் சோகம் விளைவிக்கும் நோய். அது தன்னுள் இருந்து தோன்றித் தன்னைக் கெடுக்கும்தற்கொல்லிஎன்பதைக்கூடப்புரிந்துகொள்ள விடாமல் செய்யும் தன்மையை மனிதர்க்குத் தந்துவிடுகிறது. எனவே, இதிலிருந்து தப்பி, காலம் கருதி, இடத்தால் செய்யப்படுகிற கடமைகளே கால காலத்திற்கும் உதவுகிற காரியங்களாகச் சிறக்கின்றன என்பதைப் புரிந்துகொண்டவர்கள் புத்திசாலிகள்.

'எல்லாம் சரிதான் இன்னும் கொஞ்சநேரம் இருக்கிறது. அதுவரை..' என்று நினைக்கத் தோன்றுகிறா, அதுதான் தாமதம் என்னும் தற்கொல்லி நோய் நம்முள் பரவத் தொடங்குகிற தருணம். உதறித்தள்ளிவிட்டு உலகியல் கடமையாற்ற விரைந்து எழுங்கள்.

காலைக்கதிர் Kalaikkathir

# 5 கிலோ திமிங்கில வாந்தியை விற்க முற்பட்ட நபர் கைது!

அம்பர்கிரிஸ் எனப்படும் திமிங்கில வாந்தி 5 கிலோவை 100 கோடி ரூபாவிற்கு விற்பனை செய்யத் தயாராக இருந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் அஹுங்கல்ல பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வலான பொலிஸ் ஊழல் ஒழிப்பு பிரிவு அதிகாரிகளால் குறித்த சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வாசனை திரவியம் தயாரிக்க, மருந்து மற்றும் மசாலாவாகவும் மேற்கத்திய நாடுகளில் திமிங்கிலங்கள் கக்கும் வாந்தி பயன்படுத்தப்பட்டு வருகிறது. சர்வதேச சந்தையில் இதற்குள்ள மதிப்பு மிகவும் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.(05)

# மீன் வாகனமும் காரும் மோதி நெடுங்கேனியில் விபத்து



வவுனியாநெடுங்கேனிசந்தியில் நேற்று காலை குளிரூட்டப்பட்ட மீன்கள் ஏற்றும் வாகனமும் காரும் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

குளிரூட்டப்பட்ட மீன்கள் வாகனமும் காரும் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் காரின் சாரதி காயங்களுக்குள்ளாகியுள்ளார்

விபத்து இடம்பெற்ற இடத்திற்கு சென்ற நெடுங்கேனி போக்குவரத்து பிரிவு பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (05 - 100)



# கிண்ணியா கல்வி வலயத்தின் மிகப் பின்தங்கிய 05 பாடசாலைகள் கல்வி மேம்பாட்டின்கீழ் உதவி முஸ்லிம் எய்ட் சிறிலங்கா நிறுவனத்தின் ஏற்பாட்டில்





(ஹஸ்பர் ஏ.எச்.)

அனைவருக்கும் சமத்துவமான, தரமான கல்வினை உறுதி செய்யும் தொடர்ச்சியான நிகழ்ச்சித் திட்டத்தை முஸ்லிம் எய்ட் சிறிலங்கா, அதன் தாய் அமைப்பான முஸ்லிம் எய்ட் ருமு இன் நிதியுதவியுடன் தொடர்ச்சியாக திருகோணமலை மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய வலயங்களில் ஒன்றான கிண்ணியா கல்வி வலயத்திலுள்ள மிகவும் பின்தங்கிய பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு 2021 ஆம் ஆண்டு தொடக்கம் முன்னெடுத்து வருகின்றது.






2023-24ஆண்டுகாலப்பகுதியில்முன்னெடுக்கப்பட்ட 3 ஆம் கட்ட கல்வி மேம்பாட்டுச் செயற்பாடுகளின் காரணமாக, கிண்ணியா கல்வி வலயத்திற்குட்பட்ட தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவின் ஈச்ச நகர் மதீனா வித்தியாலயம், கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவின் நடுஊற்று சக்கரிய்யா வித்தியாலயம், வான்எல புகாரி மகா வித்தியாலயம், பைசல் நகர் அல் இர்பான் கனிஷ்ட வித்தியாலயம், கச்சக்கொடி தீவு அந்-நஜாத் மகா வித்தியாலயம் போன்ற அதி கஸ்ட பிரதேச பின்தங்கிய பாடசாலைகள், தற்காலிக வகுப்பறைக் கட்டடங்கள், குடிநீர் வசதிகள், மலசல கூட வசதிகள், விளையாட்டு உபரணங்கள், மாணவர்கள், ஆசிரியர்களுக்கான தளபாடங்கள், கட்டட திருத்தப் பணிகள், ஆய்வு கூடத் திருத்தப் பணிகள் போன்ற பயன்பாடுகளைப் பெற்றுக் கொண்டன.

பூர்த்திசெய்யப்பட்ட பணிகளை பாடசாலை நிர்வாகம் மற்றும் மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வுகள் நேற்றும் நேற்று முன்தினமும் திகதிகளில் கிண்ணியா வலயக் கல்வி அலுவலக பணிப்பாளர் ஏ.எல்.சிராஜ் பிரதம அதிதியாகக் கொண்டு நடைபெற்றன.(05)





குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ஈராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# மாகாணப் பிரதி ஆணையாளர் கடமையை பொறுப்பேற்றுக்கொண்ட வைத்தியர் நபீல்



(அபு அலா)

கிழக்கு மாகாண சுதேச மருத்துவதிணைக்களமாகாண பிரதி ஆணையாளராக நியமனம் பெற்ற கல்முனை பிராந்திய ஆயுர்வேத இணைப்பாளரும் நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத மருத்துவ அத்தியட்சகருமானவைத்தியர் எம்.ஏ.நபில் தனது கடமையை திருகோணமலை சுதேச மருத்துவ திணைக்களத்தில் பொறுப்பேற்றுக்கொண்டார்.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண பிரதி ஆணையாளர் வெற்றிடத்திற்கான இடைவெளியை பூர்த்தி செய்யும் நோக்கில், கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் தரம் ஒன்றைச் சேர்ந்த ஆயுர்வேத வைத்தியர்களுக்கான நேர்முகத் தேர்வை கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுசெயலகத்தினால் நடத்தப்பட்டது.

இத்தேர்வில் அதிக புள்ளி களைப்பெற்ற

கல்முனை பிராந்திய ஆயுர்வேத இணைப்பாளரும் நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத மருத்துவ அத்தியட்சகருமான வைத்தியர் எம்.ஏ.நபில் தெரிவு செய்யப்பட்டு அவருக்கான நியமனக் கடிதத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கடந்த 06 ஆம் திகதி வழங்கி வைத்தமைக்கு அமைவாகவே அவர் தனது கடமையை பொறுப்பேற்றுக்கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில், அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஐஎல்எம்.றிபாஸ், நிந்தவூர் தள வைத்தியசாலையின்வைத்திய அத்தியட்சகர் எம்.பி.அப்துல் வாஜித், சுதேச மருத்துவ திணைக்களதிட்டமிடல்பிரிவு வைத்திய அதிகாரிகளான வைத்தியர்எஸ்.சிவச்செல்வன், வைத்தியர் எஸ்.சதீஸ், வைத்தியர் என்.வர்மேந்திரன் உள்ளிட்ட கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிரிவுத் தலைவர்களானவைத்தியர்கள் எம்.எச்.எம்.சரூக், எம்.எம். நௌஷாட், ஐஎல்.ஜலால்டீன், ஏ.எல்.அப்துல் கபூர், ஐ.எம். முஜீப், சுதேசதிணைக்களஉத்தி யோகத்தர்கள் ஊழியர்கள் எனப்பலரும்கலந்து கொண்டு சிறப்பித்தனர். (05)

# வவுனியாவில் ரூ. பல லட்சம் பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது



வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் பல லட்சம் ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

போதைப்பொருள் விற்பனை இடம்பெறுவதாக வவுனியாவிசேடபொலிஸ்புலனாய்வுப்பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவு பொலிஸ் பரிசோதகர் ரிஸ்வி தலைமையிலான பொலிஸ் பிரிவினர் திடீர் சோதனை நடவடிக்கையைஉக்குளாங்குளம்பகுதியில்முன்னெடுத் திருந்தனர்.

இதன் போது 50 கிராம் ஐஸ் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் செட்டிக்குளம் பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைப்பற்ற போதைப்பொருளின் பெறுமதி கிட்டத்தட்ட 15 லட்சம் ரூபா எனவும் கைதுசெய்யப்பட்ட நபரிடம் முன்னெடுக்கப்படும்மேலதிகவிசாரணைகளின்பின்னர் அவரை வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆயர்படுத்துவதற்குரிய நடவடிக்கையை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (05 - 100)

# ஜனாதிபதி தேர்தலை முற்று முழுதாக தமிழ் மக்கள் புறக்கணிக்கவேண்டும்

## தமிழ் தேசிய மக்கள் முன்னணி வலியுறுத்து



(ஹஸ்பர் ஏ.எச்)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைத் தமிழ் மக்கள் முற்றுமுழுதாகப் புறக்கணிக்கவேண்டும்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் திருகோணமலை மாவட்டக் கட்சிக் காரியாலயத்தில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

கட்சியின் திருகோணமலை மாவட்டப் பொறுப்பாளர் க.குகன் மற்றும் திருகோணமலை மாவட்ட செயலாளர் ஸ்ரீபிரசாத் ஆகியோர் செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிட்டிருந்தனர்.

தொடர்ந்தும் ஊடகங்களுக்கு இவ்வாறு தெரிவித்தனர்.

பொது வேட்பாளர் என்பது ரணிலுக்கு இரண்டாவதுவிருப்புவாக்கினைபெற்றுக்கொடுக்கும் ஒரு முயற் சியாகும் அதற்கு தமிழ் மக்கள் ஒரு போதும் அடி பணியக்கூடாது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் கொள்கைகள் தொடர்பில் இன்று தமிழ் மக்கள் ஒரு நல்லபிப்பிராயத்தினை கொண்டுள்ளனர், இந் நிலையில் பொது வேட்பாளரையும் புறக்கணித்து நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலினையும் புறக்கணிப்பதன் மூலமாக சிங்கள தேசத்திற்கும் சர்வதேசத்திற்கும் தமிழ் மக்கள் தெற்கில் இருக்கும் எந்தவொரு தலைவரையும் நம்பத் தயாராக இல்லை எனும் செய்தியை வழங்கமுடியும் என இதன்போது தெரிவித்தனர்.(05)




## இந்திய....

(இரண்டாம்பக்கத் தொடர்ச்சி)

உயர்ஆணையர், திருகோணமலை எண்ணெய்தாங்கி முனையத்துக்கு அருகில் வசித்து வரும் மக்களுக்கு உணவுப் பொருட் பொதிகளையும் வழங்கி வைத்தார்.

இலங்கை மக்கள் தங்கள் சொந்த வீடுகள் என்ற கனவை நிறைவேற்ற உதவும் வகையில் திருகோணமலையில் இந்தியாவினால் செயல்படுத்தப்பட்ட மாதிரி கிராம வீட்டுத் திட்டத்தையும் உயர்ஸ்தானிகர் பார்வையிட்டார். இதன் போது மக்களை மையப்படுத்திய திட்டத்திற்கு பயனாளிகள் நன்றி தெரிவித்தனர்.

மேலும் திருகோணமலையில் உள்ள விமானப்படை தளத்துக்குச் சென்றஉயர்ஆணையர், இலங்கையின் கடல்சார் கண்காணிப்பு திறன்களை அதிகரிப்பதில் முக்கிய பங்காற்றிய இந்திய கடற்படை டோனியர்தொழில்நுட்பக்குழுவுடன் கலந்துரையாடினார்.

## மருத்துவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சூழ்ச்சியை உடன் நிறுத்து' என்று வலியுறுத்தப்பட்டது.

குறிப்பாக, சேர்.ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் ஊடாக இலவசக்கல்வி மற்றும் இலவச சுகாதாரம் என்பவற்றை விற்பதற்கு அரசு சதி செய்கிறது என்று மாணவர்கள் குற்றஞ்சாட்டினார்கள்.

விஹாரமாதேவி பூங்காவிற்கு அருகில் எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுத்தபோது, அதனைத் தடுத்து நிறுத்தும் வகையில் பொலிஸார் அறிவித்தல் விடுத்தனர். எனினும், பொலிஸாரின் அறிவிப்பையும் பொருட்படுத்தாது மாணவர்கள்எதிர்ப்புநடவடிக்கையை முன்னெடுத்தனர். இதையடுத்து பொலிஸார் மாணவர்கள் மீது நீர்த்தாரைத் தாக்குதலை நடத்தினர். மாணவ செயற்பாட்டாளர்கள், அங்கிருந்தவர்களுடன் உரையாடியதன் பின்னர் கலைந்து சென்றனர்.

சேர்.ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழகத்தில் கட்டணம் செலுத்தி மருத்துவக் கல்வியை தொடர்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கான அனுமதியை அண்மையில் அமைச்சரவை வழங்கியிருந்தது.

## நாகப்பட்டினம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுள்ளது.

காங்கேசன் துறைமுகத்தினை அபிவிருத்தி செய்வதற்கு 67 மில்லியன் டொலர்கள் நன்கொடையாக எமக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதேபோன்று தலைமன்னாருக்கும், இராமேஸ்வரத்துக்கும் இடையிலான கப்பல்சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக தலைமன்னார் இறங்குதுறையை அபிவிருத்தி செய்வதற்காக அமைச்சரவை அனுமதிபெறப்படவேண்டியுள்ளது.

அந்த வகையில் அடுத்த வருடமாகின்றபோது இலங்கையிலிருந்து தனுஷ்கோடிக்கு ரயில் பயணத்தினையும் ஆரம்பிக்க முடியும். இதன்மூலமாக குறைந்த செலவில் தம்பதீவ யாத்திரையை மேற்கொள்ள முடியும் என்று கருதுகின்றேன் - என்றார்.

## ராஜபக்சக்களுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடையாது. இடம்பெறவுள்ள ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களில் ராஜபக்சக்களுக்கும், பொதுஜனபெரமுனவுக்கும் நாட்டு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள்.

இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தீர்மானமிக்கது. பொதுஜன பெரமுனவின் சார்பில் தேர்தலில்போட்டியிடஎவருமில்லை. ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவை முன்னிலைப்படுத்திக் கொண்டு ஜனாதிபதி தேர்தலில் செல்வாக்குப் பெறலாம் என்ற நிலைப்பாட்டில் இருந்துக் கொண்டு ராஜபக்சக்கள் செயற்படுகிறார்கள்.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க மீது நாட்டு மக்களுக்கு நன்மதிப்பு உள்ளது. ராஜபக்சக்களுடன் கூட்டணியமைத்து மக்களின் வெறுப்பை ஜனாதிபதி பெற்றுக் கொள்ளகூடாது. ராஜபக்சக்களிடமிருந்து விலகி செயற்படுவது ஜனாதிபதியின் அரசியலுக்கு சிறந்ததாக அமையும் என்றார்.

## இலங்கையின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜோர்ஜியாநாட்டில் இடம்பெறும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் 57 ஆவதுவருடாந்தமாநாட்டில்கலந்துக் கொண்டுள்ள நிதி இராஜாங்க அமைச்சருக்கும், அமெரிக்க திறைசேரியின் பிரதி உதவி செயலாளருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போதுபொருளாதார மறுசீரமைப்புக்காக இலங்கை முன்னெடுத்துள்ள தீர்மானங்கள் மற்றும் செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளதுடன், பொருளாதார மீட்சிக்கு இலங்கைக்குஅமெரிக்காதொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குவது மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உப தலைவர் (தெற்கு,மத்திய மற்றும் மேல் ஆசியா) சின்ங்மிங் யாங்கிற்கும், நிதியமைச்சர் செஹான் சேமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இலங்கைக்கும் ஆசிய அபிவிருத்திக்கும் இடையில் 2024- முதல் 2028 வரையான காலப் பகுதியில் கூட்டிணைவு மற்றும் மூலோபாய செயற்திட்டம் மற்றும் பொருளாதார மீட்சி உள்ளிட்ட காரணிகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதார மீட்சிக்கும்,கடன்மறுசீரமைப்புக்கும் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குவதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் உப தலைவர் உறுதிப்படுத்தினார்.

இலங்கையை முன்னிலைப்படுத்தி சார்க் அபிவிருத்தி நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையின் ஏழாவது மாநாடு ஜோர்ஜியாவில் இடம்பெறுகின்ற நிலையில் இலங்கை தலைமைத்துவம் வழங்கும் காலப்பகுதியில் சார்க் அபிவிருத்தி நிதியத்தி;ன் நோக்கத்தை அடைவதற்கும், இலக்குகளை முன்னெடுத்துச் செல்வதற்கு உறுப்பு நாடுகள் வழங்கியுள்ள ஒத்துழைப்புகளுக்கும்நிதியமைச்சர் நன்றி தெரிவித்தார்.

சார்க் அபிவிருத்தி நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையின் அடுத்த தலைவராக பங்களாதேஷ் நாட்டின் நிதியமைச்சர் அபுல் மஹமுத் அலி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## ஜப்பானிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான உதவிகள், கடன்மறுசீரமைப்பு செயன்முறையில்ஜப்பானின்ஒத்துழைப்பு, இருதரப்பு நல்லுறவை மேலும் வலுப்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com





# மெய்ப்பொருள் காண்பதறிவு




இந்த உலகம் பொருள்களால் ஆயது. பொருள்கள் தம்முள் வேறுபட்ட தனித்தன்மைகள் உடையன. சில பொருள்கள் வேறுபட்டு விளங்கினாலும் பிறிதொரு பொருளுடன் ஒன்றும் இயல் புடையன. சில தனித்தன்மை பெற்றே விளங்குவன. மாந்தர் வாழ்க்கை பொருள்களுடன் தொடர்புடையது வாழ்வின் துறைதோறும் வாழ்வு முழுவதும் பொருள்களுடன் யாதானும் ஒரு உறவு இல்லாமால் வாழ்க்கை அமைவதில்லை; அமையாது; அமைதல் முடியாது. அதனால் தான் திருக்குறள், 'பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்றது.

பொருள்களால் ஆயது வாழ்க்கை. இந்தப் பொருள்களை பொருளின் தன்மைகளை உள்ளவாறறிந்து அப்பொருள் தன்மைக்கு ஏற்பவும் வாழ்க்கைக்குரிய வகையிலும் பயன்படுத்த அறிந்து கொள்ள வேண்டும்.

பொருள்களின் தன்மையறிதலுக்குத் தனித்திறனும் பயிற்சியும், அறிவும் வேண்டும். பல பொருள்கள் தோற்றமான நிலையிலேயே தொடர்ந்து இருப்பதில்லை. மாறும் தன்மை உடையன உண்டு. சில பொருள்கள் நிலையாயின போலத் தோன்றும்; பெயர் பெற்று விளங்கும்.

ஆனால் நிலையில்லாதவனாகிப் போதலும் உண்டு. சில நன்மை தருவது போலக் காட்டி துன்பம் தரும், சில துன்பம் தருவது போலக் காட்டி இன்பம் தரும். சான்றாக நமது உடலுக்கு மெய் என்று பெயர். அனால், இது உண்மையல்ல. காலத்தால் கேடுறுதலாம். சர்க்கரை இனிமையானது. சர்க்கரையால் விளைவது பெருந்துன்பம். வெந்தயம் கசப்பான பொருள். ஆனால் வாழ்க்கைக்கு நலம் தருவது; இன்பம் தருவது.

குளிர்ச்சியானவையாக இருப்பவை சூட்டையே தருகின்றன. சூடாக இருப்பவை குளிர்ச்சியையே தருகின்றது. ஆதலால் பொருளின் தோற்றம் பார்க்காமல் பொருளின் தன்மை, அப்பொருளால் விலையும் பயன் ஆகியன தெரிந்து அதற்கேற்பப் பயன்படுத்தல் வேண்டும். இத்தகு அறிவு சராசரி மனிதர்களுக்குக் கிடைப்பதில்லை. ஞானிகளுக்கே உண்டு. சாதாரண மக்கள் தோற்றதால் கவர்ச்சிக் கப்படுவர். தற்காலிகமானவையாக இருப்பினும் உடனடியாக பலன்களை எதிர்பார்ப்பர். எப்பொருளையும் ஆழ்ந்து நோக்குவதில்லை.

வேளாண்மைக்குப் பயன்படும் இரசாயன உரங்கள் உரமேஇல்லை. இரசாயன உரங்கள் ஒருவகைத் தூண்டு சக்தியேயாகும். ஆனால் நமது மக்கள் இவைகளை உரம் என்று நம்பினார்கள்; இந்த உரத்தையே நம்பி, குப்பை உரம் தயாரிப்பதை மறந்தார்கள். இதனால் நிலத்தின் பூசாரம் குறைந்ததுதான் மிச்சம். அறியாமை அறிவாக ஏற்றுக் கொள்ளப்படுதல் இன்றைய பெரு வழக்கு. இதற்கு அப்பரடிகள் ஒரு கதை கூறி விளக்கினார்.

ஆமை சாப்பிடும் மக்கள், ஆமையை உலைப் பானையில் இட்டு வேக வைத் தார்கள். உலைப் பானையில் தண்ணீர் இளஞ்சூடாக இருக்கும் பொழுது ஆமை இன்ப போதையில் துள்ளி விளையாடும். ஆனால் அந்தச் சூடு இன்பமாக இருக்கும் பொழுது நீடிக்கப் போவதில்லை.

விரைவில் கொதி நிலை மாறும் ஆமை அழியும். இதனை உணரும் சக்தி ஆமைக்கு இல்லை. ஆமைக்குமட்டுந்தானா? மனிதர்களில் பலர்இப்படிதான்வாழ் இன்றனர். பெரும்பான்மையான மக்கள் காலப்போக்கில் துன்பம் விளவிப்பனவற்றையே இன்பமெனக் கருதி வாழ்ந்து ஏமாற்றத்திற்கு ஆளாகின்றனர். இதனைத்திருவள்ளுவர், 'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள்

காண்ப தறிவு' இருக்குறள் - 355) என்றார்.

**வி.சுபேந்தினி**
**அபிவிருத்தி உத்தியோகத்தர்,**
**பிரதேச செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

# அடியார்க் கெளியனாய் மிளிர்ந்தார் அப்பர் !



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்**
**மெல்பேண் ...... அவுஸ்திரேலியா**

சைவத்தைச் சிவனை போற்றிடும் குடும்பம்
சன்மார்க்க வழியிலே நடந்திடும் குடும்பம்
பெண்ணும் ஆணும் பிள்ளையாய் வாய்த்தனர்
பெற்றோர் சிவனைப் பரவியே வாழ்ந்தனர்

சிவனைச் சைவத்தை சிந்தையில் இருத்திட
பெற்றோர் நாளும் எண்ணியே வளர்த்தனர்
பெற்றோர் வழியில் பிள்ளைகள் நடந்தனர்
நற்றவச் செல்வமாய் நன்றாய் வளர்ந்தனர்

இல்லற வாழ்வில் இணைத்தனர் பெண்ணை
நல்லதோர் துணையும் வந்தே அமைந்திட
பெற்றவர் மகிந்தார் உற்றவர் மகிழ்ந்தார்
காலனோ மகிழா கண்ணீரைக் கொடுத்தான்

காலம் ஓடின பெற்றோர் பிரிந்தார்
கணவனை இழந்தாள் தம்பியை அணைத்தாள்
தம்பிக்குத் தாயாய் ஆகியே நின்று
தம்பியைக் காத்திட சாமியை வேண்டினாள்

தம்பி பெயரோ மருள் நீக்கியார்
மருளது அகன்றிட வழிவகை செய்தாள்
படித்தான் படித்தான் பலதும் படித்தான்
சஞ்சலப் பட்டதால் சமணத்தில் கலந்தான்

தம்பியின் போக்கால் தமக்கை நொந்தாள்
எம்பிரான் திருவடி பற்றியே நின்றாள்
சமணத் தலைமை ஏற்றிட்ட தம்பி
தன்னுள் மாற்றம் வருவதை உணர்ந்தான்

சகோதரி வேண்டுதல் சங்கரன் ஏற்றான்
தம்பியை மாற்றிட சங்கரன் விரும்பினான்
சூலை வந்தது சூழ்நிலை கலைந்தது
மீளவும் தம்பி சைவம் பற்றினான்

பற்றிய தம்பி பாடினான் பாடினான்
நற்றமிழ் நாவில் ஊற்றென வந்தது
நெற்றிக் கண்ணனும் பற்றினான் பாடலை
நாவுக் கரசனாய் வாழ்ந்திட அருளினான்

தரும சேனராய் சமணத் தலைவராய்
இருந்தவர் மாற்றம் எரிச்சலைத் தந்திட
சமணர் எதிர்த்தார் தண்டனை கொடுத்திட
ஆண்ட அரசனை அணுகினார் அனைவரும்

அரசனும் சமணன் ஆட்சியும் சமணமே
அதிகாரம் அனைத்தும் சமணத்தின் வசமே
கைது செய்திடக் கட்டளை பிறந்தது
காவலர் விரைந்தனர் கைதினை மேற்கொள

அரசன் ஆணையை அறைந்தனர் காவலர்
அரனின் அடியார் ஆத்திரம் கொண்டார்
நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
துணிவுடன் சொல்லி பணியவே மறுத்தார்

வெகுண்டான் அரசன் வில்லங்கம் விளைந்தது
சமணக் கூட்டம் சந்தோஷம் கொண்டது
நீற்றறை பூட்டினார் நஞ்சினை ஊட்டினார்
யானையே ஏவியே கொன்றிட முயன்றார்

கல்லுடன் கட்டி கடலினுள் வீசினார்
நற்றுணை நாமமாய் நமச் சிவாய
உற்றிடு துணையாய் ஆகியே நின்றது
கற்றுணை அங்கே தெப்பமாய் மிதந்தது

நாதனின் அருளால் அனைத்தும் அகன்றது
நாட்டினை ஆண்டவன் பணிந்துமே நின்றான்
சைவம் தளைக்க வழியும் பிறந்தது
சங்கரன் நாமம் தமிழெலாம் நிறைந்தது

நாவுக் கரசரை நற்றமிழ் பெற்றது
நம்சைவம் நல்லதோர் அடியாரைக் கண்டது
திருமுறை புதியதோர் கருவினைப் பெற்றது
தத்துவம் வித்துவம் தமிழினை நிறைத்தது

புதுமையைப் புகுத்தினார் புரட்சியைக் காட்டினார்
சமுதாயம் தளைக்கச் சைவத்தை வளர்த்தார்
திருவருள் நம்பினார் செப்பினார் திருமுறை
குருவென இறையின் திருவடி பற்றினார்

அரனைத் தொழுவார் அனைவரும் சமமென
அரிய தத்துவம் அப்பர் மொழிந்தார்
ஈசன் நாமத்தை இதயம் இருத்துவார்
இன்னல் அகன்று இருப்பார் என்றார்

நிலைபெற இருக்க எண்ணிடும் யாவரும்
நித்தம் கோவில் செல்லுக என்றார்
படி முறையாக பலபல செய்திடப்
பலரும் உணர்ந்திடப் பாடமும் நடத்தினார்

வணங்கத் தலையும் வாழ்த்த வாயும்
கும்பிடக் கையும் பூகொய்திட விரல்களும்
நற்பணி செய்ய நடந்திடக் கால்களும்
தந்தவன் இறைவன் என்றுமே மொழிந்தார்

தொண்டினை முதலாய்க் கொண்டவர் அப்பர்
என்றுமே உழவாரம் ஏந்தியே நின்றார்
உழைத்திடல் உயர்வெனக் கண்டவர் அப்பர்
உழைப்பவர்க் கிறைவனும் உதவுவான் என்றார்

பக்தி உலகினில் முத்தாய் ஒளிர்கிறார்
பக்குவம் பெற்றிட்ட பரமனின் அடியார்
ஓடும் செம்பொனும் ஒன்றென நோக்குவார்
ஓரிறை சிவனென உலகிடை வாழ்ந்தவர்

எண்பத் தொன்றில் இறைவன் அழைத்தான்
இன்தமிழ் இசைத்தமிழ் கேட்டிட அழைத்தான்
துன்பப் பட்டார் துயரிடை உழன்றார்
என்பும் தோலுமாய் இறையடி அடைந்தார்

ஆளுடைப் பிள்ளையார் அப்பரே என்றார்
ஆண்டவன் நாவுக்கு அரசரே என்றார்
அன்னையும் தந்தையும் மருணீக்கியார் என்றார்
ஆளுமைச் சேக்கிழார் வாகீசர் ஆக்கினார்

தாண்டக வேந்தராய் தமிழன்னைக் கண்டாள்
தமிழிசை மறவாப் பாடல்கள் தந்தார்
ஆண்டவன் விரும்பிட அருந்தமிழ் கொடுத்தார்
அடியார்க் கெளியனாய் அப்பர் மிளிர்ந்தார்

(நேற்று திருநாவுக்கரசர் சுவாமிகளின் குருபூசை தினம்)

காலைக்கதிர் Kalaikkathir

# தம்பலகாமம் கல்மெடியாவில் விபசார விடுதி முற்றுகை இரு பெண்கள் உட்பட உரிமையாளரும் கைதாகினர்

திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 97சந்தி கல்மெடியாவ தெற்கு பகுதியில் விபசார விடுதி ஒன்று முற்றுகையிடப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் வியாழக்கிழமை மாலை இடம் பெற்றுள்ளது. குறித்த சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது -

சிறிய தேநீர் கடை நடத்தி வந்த உரிமையாளர் தனது கடைக்கு பின்னால் உள்ள வீட்டில் விபசார விடுதியை நடத்தி வருவதாக பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் திடீர் சுற்றி வலைப்பின் போது கண்டி,இரத்தினபுரி பகுதியை சேர்ந்த வயது (44,45) இரு பெண்களும் வீட்டு உரிமையாளரும்(வயது38)கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர். நீண்ட காலமாக இவ் விபச்சார விடுதி நடத்தப்பட்டு வந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

கைது செய்யப்பட்ட இரு பெண்கள் உட்பட உரிமையாளரையும்தம்பலகாமம்பொலிஸ்நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தம்பலகாமம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரனைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.(05)

# மல்வத்தை பிராந்திய கணித விஞ்ஞான உயர்தர மாணவர்களுக்கு இணைந்த கரங்கள் உதவி!

## மேதினப் பொதுக்கூட்டத்தில் பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு



( வி.ரி. சகாதேவராஜா)

மல்வத்தை பிராந்திய உயர்தர கணித விஞ்ஞான மாணவர்களின் மேலதிக கற்றலுக்கான இரு வருட உதவியை ஆஸ்திரேலியா இணைந்த கரங்கள் அமைப்பு வழங்க முன்வந்துள்ளது.



இந்தவேலைத்திட்டத்தின்அங்குரார்ப்பணவைபவம் மல்வத்தை விபுலானந்த தேசிய பாடசாலையின் அதிபர் திருமதி கௌசல்யா கணேஸ்வரன் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது .

பிரதம அதிதியாக சம்மாந்துறை வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதியாக இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர் ஏ. காந்தன் கலந்து சிறப்பித்தார் . மேலும் கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எம் எம். ஜௌபர் ஆசிரிய ஆலோசகர் ஹபீப் மற்றும் மேலதிக வகுப்பு ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

மல்வத்தை வீரமுனை பிராந்தியத்தில் கணித விஞ்ஞான பாடத்தை கற்கும் 12 மாணவர்களுக்கான இரு வருட பிரத்தியேகமான விசேட வகுப்புகள் நடத்த நிதி உதவி அங்கு வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த மாணவர்களும்பெற்றோர்களும் ஆசிரியர்களும் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர்.(05)

# அனுமதி பத்திரமின்றி மீன்பிடியில் ஈடுபட்ட இருவர் படகுடன் கைது!



சுண்டிக்குளம் - சாலை கடற்பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி மீன்பிடித்த இருவர் படகுடன் வியாழக்கிழமை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.கடற்படை முகாமிற்கு அருகில் நீண்ட நேரமாக சந்தேகத்துக்கிடமான முறையில் தரித்து நின்ற படகை சுண்டிக்குளம் கடற்படையினர் திடீர் சோதனை செய்தனர்

இந்த சோதனையில் குறித்த படகு அனுமதி பத்திரம் இன்றி மீன்பிடியில் ஈடுபட்டமை தெரிய வந்தது. கைது செய்யப்பட்ட இருவரும் சுண்டிக்குளம் கடற்படை முகாமுக்கு அழைத்துவரப்பட்டு விசாரணையின் பின்னர் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக யாழ்ப்பாணம் கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.(05)

# மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரிக்கு தொழிலதிபர் கபீலால் நிதி அன்பளிப்பு





(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் ஓ.எல். தின நிகழ்வு பாடசாலையின் அதிபர் எம்.எம். ஹிர்பகான் தலைமையில் பாடசாலையின் மருதூர் கொத்தன் கலையரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு மருதமுனை அப்துல் அஸீஸ் அன்ட் சன்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் அப்துல் அஸீஸ் அப்துல் கபீல் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இம்முறை கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களை வாழ்த்தி வழியனுப்பும் இந்த நிகழ்வில் பாடசாலையின் அபிவிருத்திதொடர்பில்எதிர்நோக்கும் சவால்களைவெற்றிகொள்வதற்காக பிரதம அதிதியாக கலந்து கொண்ட அப்துல் அஸீஸ் அப்துல் கபீல் அந்த இடத்திலேயே இரண்டரை லட்சம் ரூபா நிதிக்கான காசோலையை பாடசாலை அதிபர், முகாமைத்துவ குழுவினரிடத்தில் கையளித்தார்.

அப்துல் அஸீஸ் அன்ட் சன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் முழுஅனுசரணையில்நடைபெற்ற, மாணவர்களின் ஆக்கத் திறனையும் கலை கலாசார நிகழ்வுகளையும் வெளிப்படுத்தும் ஓ.எல்தினவிழாவில்மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டதுடன் மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட சாதாரண தர பரீட்சையில் சகல பாடங்களிலும் 'ஏ' தர சித்தியை பெற்றுக் கொண்ட மாணவர்கள் நினைவுச்சின்னம்வழங்கிபாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள். 'எழுகதிர்' நினைவு மலரும் இதன் போது வெளியீட்டு வைக்கப்பட்டது.

இதன் போது பாடசாலையின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்த பிரதம அதிதி அப்துல் அஸீஸ் அப்துல் கபீல் பாடசாலை சமூகத்தினரால் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார். இதனை அடுத்து நிகழ்வின் இறுதியில் பிரதம அதிதியால் பாடசாலை வளாகத்தில் சிறப்பு வான வேடிக்கை நிகழ்வும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பெரிய



நீலாவணை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி ஆர்.ஏ.டி.சி. எஸ்.ரத்நாயக்க, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிஜெ.எஸ்.கே.வீரசிங்க, அல் -ஹம்றா வித்தியாலயத்தின் அதிபர் எம்.எம். முஹம்மட் நியாஸ், அல்- ஹிக்மா அதிபர் எம்.எல்.எம். மஹ்றூப், அல்மினல் வித்தியாலய அதிபர் எஸ். எச்.எஸ்.ஹார்ஜது ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டதுடன், பாடசாலையின் நிறைவேற்று அபிவிருத்திக் குழு செயலாளர் பி.எம்.அறபாத் யசீன் விசேட அதிதியாக கலந்து கொண்டார்.

இதில் பாடசாலையின் பிரதி அதிபர்களான எம்.பி.அஹமட் ராஜி, ஏ.ஆர்.நூறுல் மன்பூசா, உதவி அதிபர்களாக எம்.ஐ. சார்மலா, எஸ். எம்.முஹிஸாசுர்முன்,ஏ.சி.முகம்மது றக்சான், அல் ஹிக்மா ஜூனியர் பாடசாலையின் அபிவிருத்தி நிறைவேற்று குழு செயலாளர் ஏ.எம்.றியாஜத், வலயத்திற்கு பொறுப்பான அதிபர் ஈ. கமால்தீன், சாதாரண தர மாணவர்களின் பகுதித் தலைவர் ஏ.எஸ்.எம் முஜீப் உட்பட பாடசாலையின் ஆசிரியர்கள், நலன் விரும்பிகள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (05)

# 5 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருள்களுடன் கொழும்பின் பாமன்கடை பகுதியில் ஒருவர் கைது!

5கோடிரூபாபெறுமதியான போதைப்பொருள்களுடன் சந்தேக நபரொருவர் கொழும்பு பாமன்கடை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் போதைப் பொருள்தடுப்புபிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணையில் சந்தேக நபரிடமிருந்து 2 கிலோ கிராம் நிறையுடைய கொக்கைன் மற்றும் ஹாஷ் மற்றும் குஷ் உள்ளிட்ட பல போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (05)

# 2024 இன் பத்திரிகை சுதந்திர குறிகாட்டியில் இலங்கைக்கு 150 ஆவது இடம் கிடைத்தது!

## எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு அறிக்கை

2024 ஆம் ஆண்டிற்கான பத்திரிகை சுதந்திர குறிகாட்டியை வெளியிட்டுள்ள எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு இலங்கையை 150 ஆவது இடத்தில் பட்டியலிட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு இலங்கை 135 ஆவது இடத்தில் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் பத்திரிகை சுதந்திர விடயங்கள் 2009 ஆம் ஆண்டுவரை அந்த நாட்டில் காணப்பட்ட உள்நாட்டு யுத்தத்துடன் தொடர்புபட்டவையாக காணப்படுகின்றன எனத்தெரிவித்துள்ள எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு தமிழ்கிளர்ச்சி ஒடுக்கப்பட்டவேளை பல பத்திரிகையாளர்களிற்கு எதிராக இடம்பெற்ற இன்னமும் தண்டிக்கப்படாத வன்முறைகுற்றங்களுக்கும் பத்திரிகை சுதந்திரத்திற்கும் தொடர்புள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

ஊடகத்துறையில் பன்முகத்தன்மை இன்மை ஊடகத்துறை அரசியல் உயர் குழாத்தை சார்ந்துள்ளமை போன்றவற்றின் காரணமாக 22 மில்லியன் மக்கள் வசிக்கும் இலங்கையில் இதழியல்துறை இன்னமும் ஆபத்தில் உள்ளது எனவும் எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு தசாப்தங்களாக ஊடக தொழில்துறையினர் கொல்லப்பட்டனர் அல்லது காணாமலாக்கப்பட்டனர் என தெரிவித்துள்ள எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு 2015 ஆம் ஆண்டின் பின்னர் எந்தப் பத்திரிகையாளரும் கொல்லப்படவில்லை. ஆனால் முந்தைய கொலைகளுக்கானவர்கள் இன்னமும் தண்டிக்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளது.

பத்திரிகையாளர்கள் இன்னமும் இராணுவத்தினர் பொலிஸாரால் திட்டமிட்ட முறையில் கண்காணிக்கப்படுகின்றாங்கள்துன்புறுத்தப்படுகின்றாங்கள் உள்நாட்டு யுத்தம் இடம்பெற்ற பகுதிகளிற்கு செல்வதற்கு சுயாதீன ஊடகங்களிற்கு அனுமதி மறுக்கப்படுகி;ன்றது எனவும் எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது. (05)

# இரத்தகாயங்களுடன் கணவன் சடலமாக!

## மனைவி உயிர்மாய்ப்பு

வவுனியாநெடுங்கேணிகீரிசுட்டான் பகுதியில் கணவன் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளதுடன், அவரது மனைவி தனது உயிரை மாய்த்துள்ளார். குறித்த சம்பவம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில் –

நெடுங்கேணி கீரிசுட்டான் பகுதியில் உள்ள வீடொன்றில் சடலம் ஒன்று கிடக்கின்றமை தொடர்பாக நெடுங்கேணி பொலிஸாருக்கு முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளதுடன் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சம்பவத்தில் கீரிசுட்டான் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான லோகநாதன் வயது 47 மற்றும் அவரது மனைவியான லோகநாதன் பரமேஸ்வரி வயது 37 ஆகிய இருவரே உயிரிழந்துள்ளனர்.

குறித்த இருவரும் முரண்பாடு காரணமாக சிலகாலங்கள் பிரிந்திருந்ததாக ஊர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

கணவனின் தலையில் இரத்தக் காயம் இருக்கும் நிலையில் இது கொலையாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளதுடன், விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(05)

# இன்று மணிவிழாக்காணும் யாழ்ப்பாண மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன்



(வீரகத்தி தனபாலசிங்கம்)

சிலரைப் பதவிகள் பெருமைப் படுத்துகின்றன. வேறு சிலர் பதவிகளைப் பெருமைப்படுத்துகிறார்கள். இதில் நிச்சயமாக இரண்டாவது வகையான ஆளுமையாகவே நான் வைத்தியக்கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரனைப் பார்க்கிறேன்.

மிகவும் இளம் வயதில் இலங்கை சுகாதாரத் துறையில் பல உயர்பதவிகளை வகித்து அளப்பரிய சேவையைச் செய்துவரும் அவர் இன்று தனது 60 வது அகவையில் பிரவேசிக்கிறார்.

வடமராட்சியின் கரவெட்டி காலங்காலமாக பல்வேறுதுறைகளிலும்தலைசிறந்தஆளுமைகளைத் தோற்றுவித்த பாரம்பரியத்தைக் கொண்ட மண். தமிழ் மண்ணில் முதன்முதலான கம்யூனிஸ்ட் பாராளுமன்ற உறுப்பினர் பொன். கந்தையா, தமிழர் விடுதலை கூட்டணியின் முன்னாள் தலைவர் எம். சிவசிதம்பரம் தொடக்கம் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி என்று இந்த ஆளுமைகளின் பட்டியல் நீண்டுகொண்டே போகும். அதை விபரிக்க இங்கும் இடம் போதாது.

மணிவிழாக்காணும் கேதீஸ்வரன் இன்றைய காலகட்டத்தில் கரவெட்டியை அடையாளப்படுத்தும் பெருமைக்குரிய ஆளுமைகளில் ஒருவராக விளங்குவது எம்மெல்லோருக்கும் பேருவகை.

சோவியத் ரஷ்யாவில் தனது மருத்துவக் கல்வியைப் பெற்ற கேதீஸ்வரன் சமுதாய மருத்துவத்தில் முதுமாணிப் பட்டத்தை கொழும்பு பல்கலைக்கழகத்தில் பெறுக்கொண்டார்.

தனது 25 வதுவயதில் கேதீஸ்வரன் மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையின் வைத்தியப்பொறுப்பதிகாரியாக முதல்நியமனத்தைப் பெற்றார்.

அதற்கு பிறகு வவுனியா பொது வைத்தியசாலை வைத்திய அதிகாரி, வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி, வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடமாகாண பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவிகளை வகித்து தற்போது யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக சேவையாற்றி வருகிறார்.

சுகாதார சேவையில் இளவயதில் இருந்தே முக்கியமான பதவிகளை வகித்து வளமான அனுபவத்தைக் கொண்டிருக்கும் கேதீஸ்வரன் இன்று இலங்கையில் உள்ள முக்கியமான சுகாதார சேவை அதிகாரிகளில் ஒருவராக விளங்குகிறார்.

தனது நிருவாகத்தின் கீழ் இருக்கும் பிராந்தியங்களின் சுகாதார சேவைகளின் சிறப்புக்காக அரசாங்கத்தின் கௌரவத்தையும் அவர் பல தடவைகள் பெற்றிருக்கிறார்.

கேதீஸ்வரனின் எளிமையும் நயநாகரிகமான அணுகுமுறையும்மக்களுடனானதொடர்பாடல்களில் அவரின் கண்ணியமான் நடத்தையுமே அவரை இன்றைய உயர்ந்த நிலைக்கு கொண்டுவந்தன என்பதில் சந்தேகமில்லை.

கேதீஸ்வரன் அதிர்ந்து பேசியதை எவரும் கண்டிருப்பார்கள் என்று நான் நம்பவில்லை. சுகாதாரசேவை அதிகாரிகளுக்கு மாத்திரமல்ல சகல துறைகளையும் சேர்ந்த உயரதிகாரிகளுக்கும் இருக்கவேண்டிய சகல உயர் பண்புகளையும் உருவகப்படுத்தும் சிறந்த ஒரு ஆளுமையாக எம்மத்தியில் அவர் பிரகாசிக்கிறார்.

ஒரு பத்திரிகையாளன் என்ற வகையில் கேதீஸ்வரன் செய்துவந்திருக்கும் அர்ப்பணிப்புச் சிந்தையுடனான சேவைகளை நான் அறிவேன். வவுனியாவில் அவர் பல வருடங்கள் சேவைசெய்து அந்த பிராந்திய மக்களினதும் பிரதிநிதிகளினதும் பெரு மதிப்புக்குரியவராகதிகழ்ந்த மாண்பை காலஞ்சென்ற மூத்த பத்திரிகையாளரான எனது நெருங்கிய வவுனியா பொன்னையா மாணிக்கவாசகம் என்னிடம் தடவைகள் கூறியிருக்கிறார்.

கேதீஸ்வரின் நிருவாகத்தின் கீழ் அண்மைக் காலமாக யாழ்ப்பாணம் சுகாதாரசேவையில் முன்னெடுக்கப்படுகின்றமேம்பாட்டுநடவடிக்கைகள் அவருடைய நிருவாகத் திறமைக்குச் சான்று பகர்கின்றன.

கரவெட்டி ஆதார வைத்தியசாலையை இன்று பல்வேறு வசதிகளையும் கொண்டதாக மேம்படுத்தியதில் கேதீஸ்வரன் செய்த பங்களிப்பு அவரின்அர்ப்பணிப்புச்சிந்தையுடனானசேவையை நாம் தெளிவாகத் தெரிந்து கொள்வதற்கு எமக்கு நெருக்கமாகமுன்னால்உள்ளஒருசான்றுமாத்திரமே.

கேதீஸ்வரனின் மணிவிழாவைக் கொண்டாடுவதற்கு கரவைமக்களும்புலம்பெயர்ந்த உறவுகளும்இன்றுவிமரிசையானவிழாவொன்றை ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

இன்று காலை நெல்லியடி முருகமூர்த்தி ஆலய மண்டபத்தில் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியின் முன்னாள் அதிபர் நடராஜா தெய்வேந்திரராஜா தலைமையில் நடைபெறும் விழாவில் மருத்துவத்துறை மற்றும் கல்வித்துறை உட்பட பல்வேறு துறைகளையும் சார்ந்த முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டு கேதீஸ்வரனை சொந்த கரவை மக்கள் முன்னிலையில் கௌரவிக்கிறார்கள் என்பது அளவிலா மகிழ்ச்சியையும்பெருமையையும் தருகிறது.

அவரின் சேவைகளையும் சாதனைகளையும் விளக்கும் ' ஆற்றலாளன் ' என்று மகுடத்திலான மணிவிழா மலர் ஒன்று இன்றைய விழாவில் வெளியிட்டு வைக்கப்படுகிறது. மணிவிழாவுக்கான விரிவான ஏற்பாடுகளை செய்வதில் பல வாரங்களாக முன்னின்று உழைத்த கரவை திரு இருதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் இளையதம்பி இராகவனும் அவரைச் சார்ந்த குழுவினரும் பெரும் பாராட்டுக்குரியவர்கள்.

கேதீஸ்வரன் ஆரோக்கியத்துடன் நீடூழி வாழ்ந்து குறிப்பாக இலங்கை சுகாதார சேவைக்கும் பொதுவில்மக்களுக்கும்தொடர்ந்துபயனுறுதியுடைய சேவையைத் திறம்படச்செய்ய கரவை மக்களுடன் சேர்ந்து வாழ்த்துவதில் பெருமையடைகிறேன்.

# வெளிநாட்டு ஏற்றுமதிக்கு தரச் சான்றிதழ் வழங்கல்

## நிறுவனம் யாழில் திறப்பு



உள்ளூர் உற்பத்திகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு தரச் சான்றிதழை வழங்கும் நிறுவனம் யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கொன்றோள் யூனியன் என்ற நிறுவனம் யாழ்ப்பாணம் செட்டித்தெரு இல.40 இல்திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனம் தொடர்பில் யாழ்ப்பாண வர்த்தக சங்க தலைவர் இ. ஜெயசேகரம்கருத்துத்தெரிவிக்கையில்–

வடமாகாணத்திலுள்ள உற்பத்தியாளர்கள் விவசாயம் உணவு உற்பத்தி போன்ற பல வகையான உற்பத்திகளுக்கான உற்பத்தி தரச் சான்றிதழை வழங்குவதற்கு இந்த நிறுவனம் தயாராகவுள்ளது.

உற்பத்தியாளர்கள் ஏற்றுமதிக்கான தரத்தை மேம்படுத்திக் கொள்வதற்கான ஆலோசனைகளையும் , தரச் சான்றிதழ்களுக்கான ஆய்வுகள் செய்து வழங்குவார்கள். ஏற்கனவே வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து கொண்டிருப்பவர்களும் இந்த நிறுவனத்தின் தரச் சான்றிதழைப் பயன்படுத்தி தரத்தை உயர்த்தி பொருள்களை ஏற்றுமதி செய்யமுடியும்.

ஏற்றுமதி செய்யப்படுகின்ற பொருள்களுக்கானதரச்சான்றிதழ்களைப் பெற்று அனுப்புகின்றபோது குறித்த உற்பத்திப்பொருள்களை தங்கு தடையின்றி தொடர்ந்தும் அனுப்பக்கூடியதாக இருக்கும்.

வடக்கு மாகாணத்தில் இருந்து ஏற்கனவே பல நிறுவுனங்கள் இந்தச் தரச் சான்றிதழ்களை கொழும்பு சென்றே பெற்று பொருள்களை ஏற்றுமதி செய்து கொண்டிருக்கும் நிலையில் நேற்று (வியாழக்கிழமை) இந்த நிறுவனம் இங்கு ஆரம்பித்துள்ளமையால் ஏனைய உற்பத்தியாளர்களும் இந்த நிறுவனத்தைப் பயன்படுத்தி தரச் சான்றிதடைகளைப் பெற்று வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியை பெற்றுக் கொள்ளமுடியும். எனவே, உள்ளூர் உற்பத்தியாளர்கள் இதனைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். - என்றார்.

இந்த நிகழ்வில் இந்நிறுவனத்தின் முகாமத்துவ பணிப்பாளர் றொசான் றணவக்க ,வர்த்தக முகாமையாளர் சுனர விக்கிரமாராச்சி மற்றும் நிறுவன அதிகாரிகள்,யாழ்ப்பாண வர்த்தக சங்க தலைவர் இ,ஜெயசேகரன், மாகாண கைத்தொழில் அபிவிருத்திபணிப்பாளர் துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.(05)

# கணவரின் கத்திக்குத்துக்கு இலக்காகி சிகிச்சை பெற்ற மனைவி உயிரிழப்பு!

கணவரின் கத்திக்குத்துக்கு இலக்காகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மனைவி உயிரிழந்துள்ளார் என மொனராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தசம்பவம்மொனராகலை , நக்கல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

டி.எம்.இரேஷா என்ற 26 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குடும்ப தகராறு காரணமாகச் சந்தேக நபர் கடந்த 29 ஆம் திகதி தனது மாமியாரையும் மனைவியையும் கத்தியால் தாக்கியுள்ள நிலையில் மாமியார் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இதன்போது காயமடைந்த மனைவி பதுளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தையடுத்து சந்தேக நபரான கணவர் மொனராகலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மொனராகலை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்எனப்பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

## எலிக் காய்ச்சல் பரவும் அபாயம் கம்பஹாவில்!

கம்பஹா - மினுவாங்கொடை சுகாதார வைத்திய பிரிவுக்கு உட்பட்ட பல்வேறு பிரதேசங்கள் எலிக் காய்ச்சல் பரவும் அபாயமிக்க இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

அதன்படி, மாதெல்கமுவ ,நெதகமுவ , பத்தடுவன , நில்பனாகொட , உடுகம்பொல, மெதகம்பிட்டிய , வெகொவ்வ ,மாரபொல , யட்டியன , வீதியவத்த , அஸ்கிரிய மற்றும் கல்லொழுவ ஆகிய பிரதேசங்கள் எலிக் காய்ச்சல் பரவும் அபாயமிக்க இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்த பிரதேசங்களில் கடந்த ஆண்டில் அதிக எண்ணிக்கையிலான எலிக்காய்ச்சல் நோயாளர்கள் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இவ்வருடத்தின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் மாத்திரம் 17 எலிக்காய்ச்சல் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 2 மரணங்கள் பதிவாகியுள்ளன.(05)

## பிரான்ஸ் தூதுவர் மனோ சந்திப்பு!



தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர், கொழும்பு மாவட்ட எம்.பி. மனோ கணேசனுக்கும், இலங்கைக்கானபிரான்ஸியதூதுவர் ஜோன்பிரான்கொயிஸ்பெசட்டுக்கும் இடையில் சந்திப்பு கொழும்பில் உள்ள பிரான்ஸிய தூதுவரின் இல்லத்தில் நடைபெற்றது. இதன் போது, பிரான்ஸிய தூதுவருடன், தூதரக துணை தலைமை அதிகாரி திருமதி மாரி நொயெல்லா தூரிசும் உடன் இருந்தார்.

இதன் போது, இலங்கைக்கு பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் வழங்கும் உதவிகள் இலங்கையின் தமிழ் மக்களுக்கும், பின்தங்கிய பெருந்தோட்ட மக்களுக்கும் கிடைப்பதை உறுதி படுத்துமாறு மனோ கணேசன் பிரான்ஸிய தூதுவரைக் கேட்டுக் கொண்டார்.

இந்த சந்திப்பு தொடர்பில் தனது எக்ஸ் தளத்தில், மனோ கணேசன் எம்பி பின்வருமாறு கூறியுள்ளார். 'பிரான்ஸிய தூதுவர் ஜோன் பிரான்கொயிஸ் இல்லத்தில் பிரான்ஸிய விருந்தோம்பல் ஆசாரத்துடன் கூடிய பயனுள்ள சந்திப்பு நிகழ்ந்தது. தெற்கு உலக நாடுகள் தொடர்பில் பங்களிப்புகளை வழங்க பிரான்ஸ் இன்று உறுதியாக இருப்பது என்னை கவருகிறது. ஜனாதிபதிகள் மெக்ரோன், விக்கிரமசிங்க ஆகியோர் மத்தியிலான பேச்சுகளின் பின் இலங்கைக்கு சமுத்திரதுறை தொடர்பில் உதவ பிரான்ஸ் ஆர்வம் கொண்டு உள்ளதாக தூதுவர் மற்றும் தூதரக துணைதலைமைஅதிகாரிஆகியோர் என்னிடம் கூறினர். பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் வழங்கும் உதவிகள் இலங்கையில் தமிழ் மக்களுக்கும், பின்தங்கிய பெருந்தோட்ட மக்களுக்கும் கிடைப்பதைஉறுதிபடுத்துமாறுநான் கோரினேன். நமதுமக்கள்தொடர்பில் விசேட வேலைத்திட்டங்களை முன்மொழிந்து முன்னெடுப்பது தொடர்பில் தொடர்ந்து பேச்சுகள் நடத்துவது பற்றியும் கலந்துரையாடினோம்.'(05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.05.2024இல் வெளியிடப்பெற்றது